தென்மொழி

குற்றச்சாட்டாம், நடவடிக்கைகளாம்!

குற்றச் சாட்டாம்! நடவடிக்கைகளாம்!
குத்திப் பார்க்கிற தரசு! - என்னைக்
குலுக்கிப் பார்க்கிற தாட்சி!
வெற்றுச் சொல்லா, வீணெனும் எழுத்தா
விளைவித் துள்ளேன் நாட்டில்? - பல
வீறுரை சொன்னேன் ஏட்டில்!

தமிழர் இனத்தைத் தமிழன் காக்கத்
தடையென் னடா, ஏய், இங்கே? - மனம்
தயங்கேன்! அதுவென் பங்கே!
உமிழத் தக்கார் பலருளர் எனினும்
உண்டடா மறவரும் என்போல்! - தமிழ்
உறவைக் காப்போம் கண்போல்!

சிறையில் வைத்துச் சிறகை அரிந்து
சீர்குலைத் தாலும் என்கை - வினை
செய்யும் எழுதுமென் பங்கை!
முறையாய்ச் செய்யும் தொண்டுக் கிங்கே
முட்டுக் கட்டைகள் போட்டால் - ஒரு
முடிவும் காண்போம் வேட்டால்!

உரிமை முழக்கம் அதிகா ரத்தால்
ஒழிந்து போவதும் உண்டோ? - உளம்
உடைவதற் கென்ன, கல் துண்டோ?
சரிமை நிகராம் குடியர சாட்சி
சழக்கரின் வீட்டுஉரி மையோ? - பிறர்
சாவதும் வீழ்வதும் பொய்யோ?

(இப்பாடல் விளக்கத்திற்குத் தமிழ்நிலம் இதழ் எண். 70 பார்க்க)

ஆசிரியர் பெருஞ்சித்திரனார்

சுவடி : 22 ஓலை : 4

விலை 1-25 உருபா.

நமக்கு வந்த மடல்கள்.

0 : 1141 : தனித்தமிழ்க் காவலர் ஐயா, வணக்கம். தங்களைக் காண வேண்டுமென்று ஆவலோடு காத்திருந்த எனக்கு 18-1-86 அன்று கிடைத்த நல்வாய்ப்பு, என்றன் நற்பேறு. எம்போன்றோர்க்குப் பாவாணரை அறிமுகப்படுத்தி அறியச் செய்த பெருமை தங்களையே சாரும். இந்த உண்மையைத் தங்களை வெறுப்பவர்கள் கூட மறுக்க மாட்டார்கள். பாவாணருக்குப் பிறகு தமிழ் வேர்ச்சொல் கண்டறிய யார் வருவார்களோ என்று ஏங்கிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் தனித்தமிழ் நெஞ்சங்களுக்கு அருமருந்தாக அருளி அவர்களைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியுள்ளீர்கள். பலர் அறிந்துகொள்ளச் சில நாள்கள் ஆகலாம். காலம் அவர்களுக்கு விளங்கவைக்கும் என்பதுதிண்ணம்.

அருளி அவர்கள் பாவாணரை விஞ்சி நிற்கவேண்டும். அப்போதுதான், பாவாணருக்கும் அது பெருமை; அன்னைத் தமிழுக்கும் பெருமை. 'தாய் எட்டடிப் பாய்ந்தால், குட்டி பதினாறு அடி பாய' வேண்டுமல்லவா ? அதனால் அந்தத் தாய்க்குத்தானே பெருமை ?

தமிழ்ப் பகைவர்கள் இந்தத் துறைக்குவந்து தமிழைக் காட்டிக் கொடுக்காமல், தமிழ் மகனே அதைத் தன் கையில் எடுத்துக் கொண்டது, தமிழுக்குத்தான் சிறப்பு. அவருக்குத் துணையாக நிற்பதுதான் நமக்கும் சிறப்பு.

தங்கள் திருத்தொண்டும், அருளியாரின் அருந்தொண்டும் என்றென்றும் வளர்க ! வாழ்க !! அன்பன் அன்றும், இன்றும், என்றும் தங்கள் அன்பில், ஒன்றி இருக்கும் தொண்டன்,

—சி. பூ. மணி, வெங்காலூர்-21.

0 : 1142 : 12-1-86 நாளிட்ட 'தமிழ்நிலத்தில்' நம் கடிதங்களின் இந்தி எதிர்ப்பு முயற்சிபற்றி மிகத் தெள்ளிய முறையில் சொல்லியுள்ளீர்கள். சற்றும் நல் விளைவேற்படுத்தாது. இத்தகு பகட்டுப் போராட்டங்களைக் கைவிட்டு, உண்மைப் போட்டத்தில் ஈடுபடாதவரை விடிவில்லை.

24-1-86 நாளிட்ட 'The Hindu' நாளிதழில் வெளியான ஒரு விளம்பரம், என்போல் மாணவர்கட்கு அதிர்ச்சி அளித்தது. இதுவரை ஆங்கிலத்தில் மட்டுமே தேர்வுகளை நடத்திவந்த 'இந்திய முறிக்கணக்கர் கழகம்' (The Institute of Chartered Accountants of India) இனி, இந்தியிலும் தேர்வு எழுதலாம் என்று கூறியுள்ளது. தேர்வில் தேர்ந்தவுடன் கொழுத்த ஊதியத்தில் உடனடி வேலை வாய்ப்புண்டு என்று சொல்லும் அளவிற்குப் பெயர் பெற்றுள்ள இப் படிப்பிலும் இனி தமிழர்கள் இரண்டாம் தரத்தார் ஆக்கப்பட்டு விட்டார்கள்.

—க. இராயவேல், சென்னை-21.

0 : 1143 : நெஞ்சம் நிறைந்த ஐயா, வணக்கம் நலம் நலமே மலரட்டும். 'தென்மொழி'யும், 'சிட்டும்' வந்தன. மகிழ்ச்சி! ஆற்ற இயலா நாய், பண்ணை காக்கும் என்பது நாட்டு வழக்கு. அதுபோல, கனவு கண்டு கொண்டிருந்த சிலர், தஞ்சைத் தமிழ்ப்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

தொல்பகை வீழ்வன்றோ நம் விழா நாளே!

வழக்கம் போலவே பொங்கல் விழாவும்
　　வந்தது வந்தது, தமிழருக் கென்று!
முழக்கம் இல்லை; முகிழ்வும் இல்லை;
　　முழுக்க முழுக்க மழையால் நனைந்தது!
பழக்கம் கருதிச் சிறுசிறு அளவில்
　　பானைகள் இன்றிப் படையலும் இன்றி,
உழக்கரி சிபிலே பொங்கல் மணந்தது!
　　உளுந்தும் பருப்பும் வடைகளாய் மாறின!

வீணெனும் விழாக்கள் தமிழனின் விலாவை
　　வில்லாய் வளைத்தே ஒடிக்கின்ற போழ்தில்,
மாணெனும் பெருமைக் குரியவோர் விழாவாய்
　　மக்களுக் குள்ளே தமிழருக் கென்றே
பூணெனும் படிவுயர் பொங்கல் விழாவே
　　பொலிந்தது பொலிந்ததிங் கென்னினும், இன்றோ
நாணெனும் உணர்வினை விட்டவ னான
　　நாயினத் தமிழற்கு வேண்டுமோ, பொங்கல்?

மொழியுணர் வின்றியோர் மொழுக்கை உணர்வினால்
　　முதுமைத் தமிழ்நலம் முழுவதும் தவிர்த்தே
வழிவழி யாகவே சமசுக் கிருதமும்
　　வாழ்வதற் குதவியாய் ஆங்கில மொழியும்
இழிமொழி யாமோர் இந்தியும் கற்றிட
　　இம்மியும் கூச்சமும் மானமும் இல்லான்
பழியறி யாமல் பசுநெல் அரிசியைப்
　　பாலிற் பொங்கியே உண்ணவும் வேண்டுமோ?

வடக்கு வாணிகன், இடக்குப் பார்ப்பனன்,
　　வல்லா ளுமைசெய் தில்லியன் - இவர்க்குச்
சடக்கென விழுந்து வணங்கி வணங்கியே
　　சல்லிக் காசுகதக் காட்டியும் கொடுத்தே
அடக்க வொடுக்கமாய் அடிமையாய்ப் போனவன்—
　　'ஆர்'எனக் கேட்டால் 'நானே' எனும்ஒரு
முடக்குக் கழுதைக்கு விழாவும் வேண்டுமோ?
　　முழுவிலா மகனுக்கு வளைகாப்பும் தேவையோ?

சிங்களன் ஒருபுறம் சிதைக்கிறான் இனத்தை!
　　சிறியதோர் கல்லையும் எடுத்தானா இங்கே?
வங்காளி, அசாமி, பஞ்சாபி—யாவனும்
　　வல்லமை கொண்டே எழுந்துநிற் கின்றான்!

எங்கள் தமிழரோ இளித்தவாய்த் தமிழனாய்,
 இராசீவ்க்கு மூப்பனாய் இனந்தின்று கின்றான்!
பொங்கலென் பொங்கல், புழுக்கையர்க் கெல்லாம்?
 புதுவேட்டி சேலையேன், காலில்விழ் வோர்க்கே?

உழவனின் பேர்சொல்லி உழவனைக் கொல்வார்!
 உழைப்பவர் நலம்பேசி ஊரடித் துண்பார்!
மழவனின் பேர்சொல்லி வாழ்ந்தவன் இவன்தான்!
 மற்றவர்க் கடிமையாய்ப் போனவன் இவன்தான்!
விழவுவே டிக்கையில் வீழ்ச்சி மறப்பதோ?
 வேண்டிடும் உரிமைகள் யாவும் துறப்பதோ?
இழவுடை வீட்டினில் விழவென்ன விழவோ?
 இனம்சாகும் போதிலே திருவிழா முழவோ?

உரிமையை மீட்டிட முனைந்திடும் சிலபேர்
 ஒவ்வொரு நாட்டிலும் நாளும்சா கின்றார்!
நரிமையும் நாய்மையும் நாயகம் கேட்கும்!
 நாட்டினை ஆள்கிறான் வடநாட்டுப் பார்ப்பான்!
கரிமையில் தமிழனின் வரலாறு தீட்டக்
 காலமும் பார்க்கிறான் சிங்களக் கயவன்!
எரிநெய்யில் தமிழினம் கருகிடும் போதில்
 எவனுக்கும் பொங்கலென் றெலிவேண்டும், காதில்?

உயிர்நாடி நரம்புகள் துடிக்கவேண் டாமா?
 ஒவ்வொரு தடந்தோளும் புடைக்கவேண் டாமா?
பயிர்நாடும் மழைபோல உரிமைவேண் டாமா?
 பழந்தமிழ் இசைமீண்டும் இசைக்கவேண் டாமா?
செயிரேற இனம்பொங்கிச் செழிக்கவேண் டாமா?
 சீர்த்தெழும் பகைமுற்றும் சாகவேண் டாமா?
தயிரேறும் பருமத்துச் சுழற்சியில் வெண்ணெய்
 தளும்பல்போல் விடுதலை திரளவேண் டாமா?

விடுதலை மீட்குநாள் விழவுநாள் ஆகும்!
 வீழ்ந்தவர் எழும்நாளே வெற்றிநாள் ஆகும்!
கெடுதலை எங்ஙனோ வந்துற்ற தெமக்கு!
 கிளராமல் இருந்தோமால் கீழ்மையே நமக்கு!
இடுதலும் ஏற்றலும் உரிமையில் இல்லை!
 எடுத்தலும் பறித்தலும் விடுதலை எல்லை!
தொடுதலும் தவிர்கநம் தோழியர் தோளே!
 தொல்பகை வீழ்வன்றோ நம்விழா நாளே!

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

புரப்பாளர்கள் : தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன, தென்மொழி பழநி-மகிழ்நன, தென்மொழி எசு. ஆர். பிரான்சிசு, தென்மொழி கா. இளமுருகன், தென்மொழி து. தேனியல் செபராசு, தென்மொழி அரசத் தொகையன்.

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன)

கவடி: 22] உ0கஎ கும்பம் (பிப்-மார்ச்சு-1986) [ஓலை-4

மொழி; இன, நாட்டுக்குழைக்கும்

பொதுநலத் தொண்டர்களுக்கு! -4

தலைமை என்பது பல படிநிலைகளை உடையது; பல கூறுகளையும் கொண்டது. பொதுவாகவும் அதேபொழுது சிறப்பாகவும் சொல்லவேண்டுமானால், நல்ல தலைமை என்பது நல்ல தொண்டே. அதே போல் நல்ல தொண்டு என்பதும் நல்ல தலைமையே ஆகும். தொண்டும், தலைமையும் வேறுபட்டு எங்கும் இயங்கா. நல்ல தொண்டரிடத்தே நல்ல தலைமைப் பண்புகள் இருக்கும். நல்ல தொண்டராக இல்லாமல் நல்ல தலைவராக இருக்க முடியாது. உலகத்துத் தலைவர்களெல்லாம் நல்ல தொண்

டர்களாக இருந்தவர்களே! பிறவிப் பாவலர், பிறவிக் கலைஞர், பிறவிச் செல்வர், பிறவி-மேதை என்பதுபோல் பிறவித் தலைமை என்பது எங்கும் எதிலும் கிடையாது. எழுத்தைக் கற்றுக் கொள்ளாமல் எவ்வாறு படிக்கவோ எழுதவோ முடியாதோ, அவ்வாறே நல்ல தொண்டராக உருவாகாமல் நல்ல தலைவராக ஆகவே முடியாது.

தலைமை என்பது ஆசிரியத் தன்மை மட்டுமன்று; மாணவத் தன்மையும் ஆகும். ஆசிரியனும், மாணவனும் போலவே, தலைவனும், தொண்டனும் ஊசியும், நூலும் போன்றவர்கள். (ஊசி நுழையும் போதெல்லாம் கூடவே நூலும் நுழைகிறது.) எனவே, நல்ல தூய்மையான தொண்டு வளர்ச்சியே நல்ல தலைமையை உருவாக்க முடியும். இங்கு, குறிப்பாகத் தமிழர்களிடையே நல்ல தலைவர் இல்லை என்றால், நல்ல தொண்டுணர்வு உருவாக வில்லை என்றுதான் பொருள். இங்குள்ள தொண்டர்களெல்லாரும் ஒன்றால் அடிமைகள் போல் செயல்படுகிறார்கள்; இன்றால், குருவுக்கு மீறிய மாணவர்கள் ஆகிவிடுகிறார்கள். தொண்டர்கள் அடிமைகள் அல்லர். தொண்டர்கள் தலைவர்க்குத் தோள்களைப் போன்றவர்கள்; தோழர்கள். தோள்கள் இயங்கினால்தான் கைகள் இயங்கும். கைகள் இயங்கினால்தான் கால்கள் இயங்கும். அப்படியே முதனிலைத் தொண்டர்களும், இரண்டாம் மூன்றும் நிலைத் தொண்டர்களும் ஆவார்கள். தோள்கள் தலைக்குப் பக்கத்தில் இருந்தாலும், தலைபோல் இயங்க முடியாது. எனவே, முதனிலைத் தொண்டர்கள் தலைமைக்குப் பக்கத்தில் இருந்தாலும், தலைமைபோல் கருதி, இரண்டாம் நிலை, மூன்றும் நிலைத் தொண்டர்களைத் தாழ்வாக எண்ணவோ, ஏவவோ செய்து விடக்கூடாது. தலைமை என்பது தகுதிகளால் அமைவதே தவிர, பதவியால் வருவதன்று. பெரியாரைப்போல், காந்தியைப்போல், காமராசரைப்போல் ஒரு நல்ல தலைமை, நாட்டுக்கோ இனத்துக்கோ கிடைப்பது அரிது. அவர்களுக்கென்று அவர்கள் எதையுமே வைத்துக் கொள்ளாததுடன், தங்களுடைமைகளையும் மக்களுக்காகக் கொடுத்த துறவிகளைப் போன்றவர்கள் அவர்கள்.

உடைமையை விரும்புபவர்கள் நல்ல தலைவர்களாக முடியாது. உடைமையை இழப்பதுதான் தலைமைக்கு முதல் தகுதி. அதேபோல், நல்ல தொண்டன் உடைமையை விரும்பக்கூடாது. உடைமை, அல்லது பொருள் தேவை என்பது வேறு; அதை விரும்புவது என்பது வேறு. தலைவன் கோடிக்கணக்கான உருபா வைத்திருக்கலாம்; அது தேவையும்கூட. ஆனால் அதில் ஓர் உருபா வைக்கூடத் தன் தனிநலத்துக்கென்று கருதி விடக்கூடாது. இதனை நன்கு தெளிவுபடுத்தத் தொடக்கக் காலத் தென்மொழி அன்பர்களுக்கு உடைமையைப் பொறுத்த அளவில் ஓர் எடுத்துக்காட்டை நாம் கூறுவது வழக்கம்.

நம்மிடம் ஒருகாணி நிலமும் ஒருபடி விதை நெல்லும் கொடுக்கப் பெற்றுள்ளன, அல்லது வந்து வாய்க்கின்றன என்று வைத்துக் கொள்ளுவோம். அந்த ஒருபடி நெல்லை அந்த ஒரு காணி நிலத்

தில் நாம் விதைத்துப் பாடுபட வேண்டும்; அஃது ஒன்றுக்குப் பத்தாக விளைகிறது என்று வைத்துக்கொள்வோம். அல்லது நூறாக விளைகிறதாக வைத்துக்கொள்வோம். நம் அன்றாடத் தேவைக்கு அதில் ஒருபடி நெல்லையே நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். மீதி தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதுபடி நெல்லை நாம் மீண்டும் விதைத்துப் பாடுபடவேண்டும். அது தொள்ளாயிரத்துத் தொண்ணூறு படியாக விளைகிறதென்று வைத்துக்கொண்டால், மீண்டும் நம் தேவைக்கு என அதில் நாம் ஒருபடி நெல்லையே எடுத்துக்கொள்ள வேண்டும் மற்றதை மீண்டும் விதைத்து மேலும் ஒன்றுக்குப்பத்தாகவோ நூறாகவோ பெருக்க நாம் உழைக்கவேண்டும் அப்பொழுதும் நாம் நம் தேவைக்கென ஒவ்வொரு படி நெல்லையே எடுத்துக் கொள்ளவேண்டும். ஆயிரம் படி விளைகிறதென்று, நம் தேவைக்கு மீறி எதையும் எடுத்துக் கொள்ளக்கூடாது. அந்த அளவு மனப் பான்மைதான் தொண்டுக்கும் தேவையானது; தலைமைக்கும் தேவையானது. உடைமை வளர வளர, நம் தேவைகளையும் கூட்டிக்கொள்ள வேண்டியதில்லை. அப்பொழுதுதான் நம் தொண்டுக்கு அவை முழுவதும் பயன்படுத்தப் பெற்று, நம் தொண்டு சிறக்கும்; அதன் பரப்பும் வளரும். இல்லெனில் நாம் நாம் சிறப்போம்; தொண்டு சிறவாது. இந்தத் தேவை அளவீடு, நம் குடும்ப நிலையிலும் மீறக்கூடாது. இதில் ஒருபடி நெல் என்பது ஒரு குறியீடேயொழிய, சட்டமன்று, தேவைக்கு இரண்டுபடி வேண்டும் என்றால் அதை எடுத்துக் கொள்வதில் பிழையில்லை; தவறுமில்லை.

'தொண்டு' என்னும் சொல் உழவு அடிப்படையில் தோன்றிய சொல்லாக இருப்பினும், அஃது உழைப்பையே குறிக்கும். பெரும் பாலும் நம் முதிய மொழியாகிய தமிழில் உள்ள, செயல், வினை, தொண்டு, தொழில் முதலிய அனைத்துச் சொற்களும் உழவு அடிப்படையில் தோன்றிய சொற்களே! வேலை என்பது போர் அடிப்படையில் (வேல்-மூலம்) தோன்றிய சொல். 'கருமம்' என்பது உழவுக்கு வேண்டிய கருவித்தொழில் அடிப்படையில் தோன்றிய சொல்லாகும். இந்தச் சொற்களைக் கொண்டே தமிழினத்தின் தொன்மையையும், நாகரிகத்தையும் பண்பாட்டை யும் வரையறுக்கலாம். ஆனால், அவை பற்றியெல்லாம் இங்கு விளக்கத் தேவையில்லை. அவை வேறுவேறு இடங்களில் விளக்கப் பெற்றுள்ளன.

இக்கால், நமக்குத் தேவையான 'தொண்டு' என்னும் சொல், தன்னலமற்ற உழைப்பையே குறிப்பது என்று ஒரு பொருளை மட்டும் நாம் தெரிந்து கொண்டால் போதும். அதுவும் அது வேளாண்மை போன்ற உழைப்பையே சிறப்பாகக் குறிக்கும். அதன் பொருட்டாகத்தான் நாம் உழவையும் விதைநெல்லையும் உவமையாக, எடுத்துக்காட்டாக இங்குக் கூறவேண்டி வந்தது. தொண்டன் உழவனைப் போன்றவன். மனத்தை உழுது பக்குவப் படுத்திப், பயனை விளைவிப்பவனைச் 'சொல்லேர் உழவன்' என்றும் திருவள்ளுவர் அவனைப் பாராட்டினார், சொல்லேர் உழவன்

என்னும் இணைச்சொல், சொல்வதில் அஃதாவது கருத்துகளைப்பேசு வதில் மட்டும் கெட்டிக்காரன் என்று பொருள் தருவதாகக் கருதிக் கொள்ளக்கூடாது! சொல்வதைக் கொண்டு செயலாலும் உழைப்பவன்' என்று பொருள் தருவது, அந்தச் சொல்.

செயலுக்கு அடிப்படை சொல். சொல் செயலாக விளைய, நாம் சொல்லும் சொல் கருத்து நிறைந்ததாகவும் இருத்தல் வேண்டும். நெல் எவ்வாறு சாவியாகவோ, பதராகவோ இருந்தால் விளையாதோ, அவ்வாறு சொல்லும் கருத்தற்றதாகவோ, பதரைப் போல் புன்மை உடையதாகவோ இருப்பின் விளைவு வராது. அதனால்தான் 'சொல் என்னும் சொல்லுக்குத் தமிழில் 'நெல்' என்று ஒரு பொருள் (தமிழில் மட்டுமே) உண்டு. (அகர முதலியைப் பார்க்கவும்.) சொல், சொன், சொன்றி, சொறு, சோறு என்பன பல சொல் ஒரு பொருள். சொல், விதை நெல்போல் இருத்தல் வேண்டும். அதேபோல் நெல்லும் சொல்போல் கருவுடையதாக இருத்தல் வேண்டும். அதனால்தான் சொல்லை நெல்லென்றும் பொருள் கொண்டார், தமிழர்.

மக்கள் மனங்களை உழுது, சொற்களை விதைத்து நல்ல செயல்களை, விளைவுகளை உண்டாக்குபவர்களே நல்ல தொண்டர்கள். தொண்டர்கள் எல்லாருமே நல்ல கருத்துடன் பேசத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும் என்பதில்லை. நல்ல கருத்துகளை மக்களிடம் மனங்கொள்ளுமாறு கூறி, அவர்களைச் செயல் உடையவர்களாக மாற்றி, அச் செயல்களால் அவர்களுக்கு நல்ல விளைவுகளைப் பயன்களைக் கிடைக்குமாறு செய்வதே பொதுநலத் தொண்டுக்கு இலக்கணம் ஆகும். இத் திறத்தில் உழைப்பவர்களே முதல்நிலைத் தொண்டர்களாக இருக்க முடியும்.

ஆனால், நம்மில் சிலர் பேசத் தெரிந்தவர்களாக இருக்க மாட்டார்கள்; செய்யத் தெரிந்தவர்களாக இருப்பர். அவர்கள் விளைவுக்குரியவர்கள் என்னும் பெருமையைப் பெற்ற இரண்டாம் நிலைத் தொண்டர்கள். இனி, பேசவும் தெரியாமல் செய்யவும் தெரியாமல், அஃதாவது எதையும் தாமே வகுத்துக்கொண்டு திட்டமிட்டுச் செய்யத் தெரியாமல், சொல்வதை மட்டுமே - அஃதாவது பிறர் வகுத்துத் திட்டமிட்டுக் கொடுத்தால் மட்டுமே இயங்கக் கூடியவர்களாக (நன்றாகக் கவனிக்கவும் ஏவினால் இயங்கக் கூடியவர்களாக) மட்டுமே இருப்பார்கள். அவர்கள் மூன்றும் நிலைத்தொண்டர்கள் வரிசையைப் பெற்றவர்கள்.

தொண்டு நிலையில் இந்தப் படிநிலைப் பாகுபாடுகளின், எவர் எவர் தோளாகவும், கையாகவும், கால்போலும் பிற உறுப்புகளாகவும் இருந்து இயங்கவேண்டும் என்னும் அடிப்படையில் பகுத்துக் கூறப்பெற்றதே தவிர, அவர்களின் தகுதிநிலையில், உயர்வுதாழ்வு அடிப்படையில் அன்று என்று கருதிக் கொள்ளுதல் வேண்டும். அதற்குத்தான் முன்னரே கூறினேம், தலைவர் என்பவர் தொண்டர் என்பவரை விடத் தொண்டு நிலையில்- அஃதாவது செயல் நிலையில் முகாமையான ஓர் உறுப்பாண்மை பெற்றவரே



நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

பாட்டு : கூச

மருத்து வோனே! மருத்து வோனே!
திருத்தாக் கொடுநோய்க் கையிகந் தோரைக்
கருத்துகத் தணிக்கும் மருத்து வோனே!
பொறிப்புல னைந்துஞ் செறித்த வாகி
நெஞ்சு புதைத்து நஞ்சுரை குயில்வோர்
அஞ்சு வினைக்குயிர் அஞ்சா துழல்வோர்
நன்றி கொன்றவர் நன்னடைப் போலியர்
என்றிவர்க் கறிதி கொல் மருந்தே
கன்றிய நெஞ்சோர் களிப்புற வுரைமே!

பொழிப்புரை :

மருத்துவோனே! மருத்துவோனே! நலப்படுத்தவியலாத கொடிய நோயினால், பலராலும் கைவிடப்பெற்றவர்களைக் கருத்துடன் (கவனித்துத்) தணித்து நலமாக்கும் (ஆற்றல் வாய்ந்த மருத்துவோனே! ஐந்து புலன்சார்ந்த பொறிகளும் நல்ல முழுத் திறனுடன் இயங்குகின்ற நிலையில், தம் (உண்மை) நெஞ்சைப் புதைத்துக்கொண்டு, நஞ்சு தோய்ந்த இனிமை உரைகளைப் பேசுவோர், உலகம் அஞ்சுகின்ற செயல்களை அஞ்சாமல் செய்து திரிவோர். செய்த நன்மைகளைக் கொன்றவர்கள், புறத்தே நல்ல நடையினராகிய அகத்துப் போலியர்—என்னும் இவர்களை நலப்படுத்தும் மருந்தினை அறிவாயோ? அறியின், (இவர்களின் கொடிய நிலைகளைக் கண்டு) மனம் நொந்துபோய் இருப்பவர், மகிழ்வெய்தும்படி உரைப்பாயாக.

(முன் பக்கத் தொடர்ச்சி)

தவிர, தகுதி நிலையில் தொண்டருக்குச் சமமானவரே; எவ்வகையாலும் உயர்ந்த மாந்தத் தகுதி உடைய உயர்ந்த பிறப்பினரல்லர் என்பதை உறுதியாக எண்ணிப்பார்க்க வேண்டும். ஏனெனில், இவ்வகையான வேறுபாடுகளால்தாம், நமக்குள் போட்டி, பொறாமைகள், பூசல்கள், உள்ளரிப்புகள், உட்பகைகள் இரண்டகங்கள், வஞ்சகங்கள், புறப்பகைகள், ஏசல் பேசல்கள், இழிவுகள், பழிகள், ஒத்துழையாமைகள், வம்பு வழக்குகள், சண்டை சழக்குகள், குத்துவெட்டுகள், கொலைகள், சீரழிவுகள், பல்வேறு பிளவுகள் முதலியவை ஏற்பட்டு, நம்மையே ஒற்றுமையற்றவர்களாகவும், உருப்படியாகாதவர்களாகவும் செய்து வருகின்றன என்பதை நாம் ஓர்தல் வேண்டும். (தொடரும்)

விரிப்பு : இப் பாடல் புறத்துறையைச் சார்ந்தது.

உலகியலில், நல்ல உடல் நலன்கள் சார்ந்தவர்களாகி, உள்ளத்தின் நல்லுணர்வுகளைப் புதைத்துக்கொண்டு, நஞ்சுபோலும் தீமைபயக்குகின்ற உரைகளை இனிமையாகப் பேசுவோர்களாலும், மக்கள் அஞ்சுகின்ற கொடிய செயல்களைத் துளியும் அஞ்சாமல் செய்வோர்களாலும் பிறர் செய்த உதவிகளுக்குரிய நன்றியுணர்வு இல்லாதவர்களாலும் வெளியில் நல்ல நடைமுறைகளை உடையவர்களாகி, அகத்தே வேறுபட்ட உணர்வுகளைக்கொண்ட போலி மாந்தர்களாலும் உள்ளம் நொந்து வருந்திய ஒருவர், பிறரால் நலமாக்க முடியாமல் கைவிடப்பட்ட கொடிய நோயாளர்களையும், குணப்படுத்துகின்ற திறன்வாய்ந்த மருத்துவரிடம், மேற்கண்டாரைக் குணப்படுத்தும் மருந்தும் உளதோ? உண்டாயின் தெரிவிக்க வேண்டிக் கொண்டதாகும், இப் பாடல்.

மருத்துவோனே மருத்துவோனே—என இருமுறை அடுக்கியது, இன்றியமையாத் தேவையையும், மருத்துவரின் பெருமையையும் உணர்த்தியது.

திருத்தாக் கொடுநோய் : எவராலும் நீக்கவியலாத கொடிய நோயினால்.

கையிகந்தோரை : கைவிட்டவர்களை. கைவிடப்படுதல் - நோய் கடுமையானதால் அதை நலமாக்க இயலாமல் நோயாளிகளைக் கைவிட்டு விடுதல்.

கருத்துகத் தணிக்கும் : கருத்து மிகும்படி கவனித்து அந்நோயைத் தணிக்கும்.

மருத்துவோனே என்று மூன்றாம் முறையும் விளித்தது இனி கூறப்போகும் கருத்தையும் கவனிக்கவேண்டும் என்னும் வேண்டுதல் பொருளைக் குறித்தது என்க.

பொறிப்புலன் ஐந்தும் செறித்தவாகி : பொறிகள் மேல் நின்று இயங்கும் ஐந்து புலனறி நிலைகளும் செறிவுடன் இருந்து பழுதின்றி இயங்குவன வாகி.

நெஞ்சு புதைத்து நஞ்சுரை குயில்வார்: நெஞ்சு களனாக நின்று இயங்கும் மனச் சான்றினைப் புதைத்துவிட்டு, வாயில் நஞ்சுபோல் தீமை செய்யும் உரைகளைக் குயில்போல் இனிமையாகக் கூறுவார் குயிலுதல் - இனிமையாகப் பேசுதல்; புணர்ச்சியில் உகரம் கெட்டது.

அஞ்சு வினைக்கு : மக்கள் அஞ்சத்தக்க செயல்களுக்கு.

உயிர் அஞ்சாது உழல்வோர்: உயிர்க்கு வருந் துன்பத்திற்கு அஞ்சாமல் சுழன்று இயங்குவோர்.

நன்றி கொன்றவர் : செய்த உதவிகளை நினைத்துப் பாராமல் அவற்றைச் செய்தவர்களுக்கே தீங்கு செய்பவர்.

நன்னடைப் போலியர் : புறத்தே நல்ல குணமுள்ளவர்கள்போல் நடந்து அகத்தே வேறுபடும் போலி மாந்தர்கள்.

என்று இவர்க்கு : என்னும்படியான இப்படிப்பட்ட உளநோய் கொண்டவர்களுக்கு.

அறிதிகொல் மருந்தே: அறிவாய் கொல் தக்க மருந்தினையே. கொல அசைநிலை: இனி கொல் மருந்தே எனக்கொண்டு, அவ்வாறு மருந்தில்லாவிடினும், அவர்களைக் கொன்றழிக்கும் மருந்தையாகிலும் அறிவையோ என்று அசைக்கும் பொருள்கொண்டு உரைக்கலாம் என்க.

கன்றிய நெஞ்சோர்: மேற்கூறிய நால்வகை மக்கள் என்னுந் தோற்றத்துத திரிபுள்ளம் கொண்டவர்களைக் கண்டுகொண்டு நொந்து கசிந்துபோன உள்ளமுடையவர்கள்.

களிப்புற உரைமே: மகிழ்வுறும்படி கூறுவாயாக.

பொதுவான நல்ல மாந்தர்களுக்குரிய வகையில் நோய்ப்படாத உறுப்புகளைக் கொண்டிருப்பினும், நஞ்சுள்ளம் உடையவர்களாக இனிய உரைகளைப் பேசுபவர்களையும், தீயனவற்றை அஞ்சாமல் செய்புவர்களையும், நன்மை செய்தார்க்கும் தீங்கு செய்யும் நன்றியற்றவர்களையும், நல்லவர்கள் போல் நடக்கும் போலி மாந்தர்களையும், திருத்துவதற்கு ஏதேனும் மருந்து உண்டோ, தீராமல் கைவிடப்பட்ட நோயாளர்களையும் மிக்கக் கருத்துடன் கவனித்து அவர்களின் நோய்களைத் தீர்க்கின்ற மருத்துவனே! அவ்வாறு மருந்து உளதாயின், அந்த மாந்தத் திரிபுள்ளவர்களுக்கு அதனைக் கொடுத்து அவர்களைத் திருத்தி, அவர்களைக் கண்டு உள்ளம் வருந்துகின்றவர்கள் மகிழுமாறு, அவர்களை நல்லவர்களாகச் செய்வாயாக என்றபடி.

இப்பாடல் பொதுவியல் என்னும் திணையும், முதுமொழிக் காஞ்சி என்னும் துறையும் என்க. 0

நம் முகவர்களுக்கு எச்சரிக்கை!

கடுமையான பொருளியல் இடர்ப்பாட்டிலும், வினையழுத்தங்களிலும் உழன்று 'தமிழ்நிலத்'தை மொழி, இன, நாட்டளவில் விடுவிப்பதையே நம் உயிர்க் கொள்கையாகக் கொண்டு, கடந்த 26 ஆண்டுகளாக வந்து கொண்டிருக்கும் 'தென்மொழி' இதழுக்கும், 'தமிழ்நிலம்', 'தமிழ்ச்சிட்டு' ஆகிய இதழ்களுக்கும் முகவராய் இருக்கும் நம் அருந்தமிழ் நெஞ்சங்கள் பல, நம்முடைய இக்கட்டையும், இடர்ப்பாட்டையும் செவ்வனே உணராமல் அலுவலகத்தினரும், ஆசிரியர் அவர்களும் விடுத்திருந்த மடல்களையும் பொருட்படுத்தாயல், பட்டியல் தொகைகளை அனுப்பாமலே இருப்பது மிகவும் வருத்தத்திற்குரியது.

இறுதியாக ஆசிரியர் அவர்கள் விடுத்திருந்த 'எச்சரிக்கை மடலு'க்குப் பின்னும், தொகை அனுப்பாமல் இருக்கும் நன்னெஞ்சங்கள், இச் செய்தியினைக் கண்டும் விடுவிக்கவில்லையாயின், இவ்விதழை அடுத்து வருகின்ற 'தமிழ்நிலம்', 'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு' ஆகிய இதழ்களில், அவர்களின் பெயர்களைத் தெளிவாக வெளியிட வேண்டி வரும் என்பதை, எச்சரிக்கையுடனும் வருத்தத்துடனும் தெரிவித்துக் கொள்கிறோம்! —அமைச்சர்.

'தென்மொழி'த் தாளிகையின் வெளியீட்டு அறிக்கை

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1955)
19-ஆ. ஆறு (வகுப்பு 8-ஆம் கட்டளைப்படி)

1.	வெளியிடும் இடம்	:	சென்னை
2.	காலமுறை	:	மாதம் ஒருமுறை
3.	அச்சிடுவோர் பெயர்	:	திருவாட்டி. மா. தாமரை
	இனம்	:	தமிழர்
	முகவரி	:	தென்மொழி அச்சகம் சென்னை-5
4.	வெளியிடுவோர் பெயர்	:	திரு. பெருஞ்சித்திரனார்
	இனம்	:	தமிழர்
	முகவரி	:	தென்மொழி அச்சகம் சென்னை-5
5.	ஆசிரியர் பெயர்	:	திரு. பெருஞ்சித்திரனார்
	முகவரி	:	சென்னை-5
	ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர்; கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவர்களும்		திரு. பெருஞ்சித்திரனார் சென்னை-5.

பெருஞ்சித்திரனாராகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று உறுதி கூறுகின்றேன்.

25—2—86
சென்னை—5

பெருஞ்சித்திரன்.
(ஒப்பம்)

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் அடங்கிய, கிழமை இதழ்.

1.	தனியிதழ்	விலை	உரு.	00—65
2.	ஆண்டுக் கட்டணம்		உரு.	36—00
3.	அரையாண்டுக் கட்டணம்		உரு.	18—00

தொடர்புக்கு : தமிழ் நிலம் – 5, அருணாசலத் தெரு. சென்னை-5.

தொடர் - 2

தற்கால இலக்கியத்தில் முற்போக்குப் பார்வை!

— குண

3. பண்பாட்டு எதிர்ப்பு :

திருத்தப் பேசுவது, திருத்த எழுதுவது திருத்தப் பழகுவது போன்ற திருத்தத்தால் வாழ்வும் மனமும் பண்படுவதே பண்பாடு. இத் திருத்தத்தை ஒழித்து மொழியையும் இலக்கியத்தையும் நெறிப் படுத்தாமல் 'கண்டபடி பேசு; கண்டபடி எழுது; கண்டபடி ஒழுகு' என் பதே இவர்களுடைய பண்பாட்டு எதிர்ப்புக் (Auti-calture) கொள்கை. தமிழைக் குலைப்பதெனின் இவர்களுக்கு ஒரு தனிப்பேர் உவகை. தமிழில் பேசுவதும், தமிழரெனச் சொல்லிக் கொள்வதும் தாழ் வானவை எனக் கருதுகிற இவர்கள், தாழ்வு மனப்பான்மை பெற் றெடுத்த தவப் பிள்ளைகள். இந்த முற்போக்குகள், திரைப்பட மாயை உலகத்திற்குள் வேறு புகுந்து, அங்கு வேறு தங்களின் கைவரிசையைக் காட்டத் தொடங்கியுள்ளனர். மறைந்த முற்போக் குப் பாவலர் ஒருவரின் அன்பு இளவல், இன்று நாட்டுப்புறப் பாடலும், இசையும் என்னும் பெயரில் தமிழகத்தின் தெருவெல் லாம் இழிவான டப்பாங்குத்து) கூத்தடிப்பு இசையை முழங்கச் செய்துள்ளதே இதற்குச் சான்று கூறும். இதனால், தமிழைக் கொச்சைப்படுத்திக் கெடுத்துக் குட்டிச் சுவராக்குவதே முற்போக் குப் பார்வையில இலக்கிய ஒழுங்கு என்பது புலனாகிறது.

4. மேலை வழிபாட்டுடன் புதிய பார்ப்பனியம் :

இந்த முற்போக்குகளிடம் இருவகையான போக்குகளைப் பார்க்கலாம். வடமொழியில் வழிபாட்டர்களாகிப் புதிய பார்ப்ப னியத்தின் 'புரோமிதியசு'களாக இருப்பவர்கள் ஒரு பிரிவினர். இவர்கள்தாம் புதிய 'பாரதங்கள்'. ஆங்கிலேயர் காலத்திலிருந்து வந்து இங்கு இறங்கிய பின்னர்தான், இங்கு அறிவே தோன்றியது என்றும், மேலை வழிபாட்டினர் மற்றொரு பிரிவினர். நம்முடைய முன்னோர்களுக்கு அறிவென்றால் என்னவென்றே தெரியாது என அடித்துப் பேசுகிற உலக நம்பிகளாக இவர்கள் உலவி வருகின் றனர். இதனால், தாழ்வு மனப்பான்மையும், அடிமை மனப்பான்மை யும் இவர்களின் முற்போக்கு இலக்கியத்தின் இயல்புகளாக மிளிர் கின்றன.

நல்ல தமிழைப் பழகுவது இந்த முற்போக்கு இலக்கியத்திற்கு ஓர் எட்டிக்காய். தனித்தமிழ் மக்களுக்குப் புரியாதென அலறுகிற இவர்களோ, மக்கள் அன்றாடம் பழகுகிற ஜலம், புஷ்பம், பிதற்று, பிரதானம், பிரத்யேகம் போன்ற, 'மிக எளிய' சொற்களை தேடிப் பிடித்து ஆண்டு, மக்களுக்கு ஒரு நடையாக, மக்கள்முன் மக்க

ளுக்காக ஒரு நடைபோட்டுக் காட்டுபவர்கள். இதனால், அக்கிர காரத்து மொழிதான் முற்போக்கு இலக்கியத்தின் செம்மாந்த தனி நடையாம் இவர்கள் பார்வையில்!

திராவிட இயக்கத்தின் அன்றைய வளர்ச்சியைக் கண்டு அரண்டு அதனிடம் அடி வாங்கியதால் அதைப் பகைத்துக் கொண்ட தமிழகப் பொதுவுடைமை இயக்கம், வழிதெரியாது பார்ப்பனியத்துடன் போய் ஒட்டிக்கொண்டது. இத்தகைய நிலையால் வந்த புதிய பார்ப்பனிய வரட்டியமும்கூட முற்போக்கு இலக்கியப் பார்வைக்கு இருக்கிற மற்றொரு இலக்கண அமைதியாக இருக்கிறது.

5. மலட்டுத்தனம்:

முற்போக்கு இலக்கியத்தை இவ்வாறு திறனாய்வதனால், நாம் பிற்போக்கு இலக்கியங்களைப் போற்றுகிற பிற்போக்கராக ஆகி விடுவோமா? இல்லை. இம் முற்போக்குகளின் இலக்கியங்களில் சிலவத்தம்பிச் சுட்டிய இலக்கண அமைதிகள் அறவே இல்லை. இதைச் சுட்டிக் காட்டுவதே நம்முடைய நோக்கமாகும். ஒரு புறத்தில், புதிய பார்ப்பனிய நலன்களைப் பேணுவதாகவும் மறு புறத்தில், உதிரித் தனத்தில் உவகை கொள்வதாகவும் இருக்கிற இந்த முற்போக்கு இலக்கியம் உள்ளபடியே பிற்போக்குத்தன மானது என்பதைத் தோலுரித்துக் காட்டவே இவற்றையெல்லாம் சொல்லிக் காட்டவேண்டி வந்தது.

உருசிய மொழியில் பதினெட்டாம் நூற்றாண்டில்தான் முதன்முதலில் பேரிலக்கியங்களே தோன்றின. அம் மொழியில் செர்னிசெவ்சுக்கியும், டால்சுடாயும், துருகனெவும், கார்க்கியும், செக்கோவும் படைத்த அழியா இலக்கியங்களுக்கு ஈடான இலக்கிய நூல் ஒன்றையாவது இந்த முற்போக்குகள் தமிழில் படைத்ததுண்டா? இல்லை. அத்தகைய இலக்கியத்தைப் படைக்க வல்ல மரபு மரபறியா உதிரிகளுக்கு இருக்கவே முடியாது. உருசிய இலக்கியப் படைப்பாளரான துர்கனெவைப் பற்றிக் குறிப்பிட்ட பிராங்சிசுக்கோ கூகல்மான் இவ்வாறு சொன்னார்:

உருசிய ஆதனின் (ஆன்மாவின்) தனித்தன்மைகளைத் தம் முடைய மறைமுகமான சிலாவானிய உணர்ச்சியுடன் வியத்தக்க வகையில் துர்கனெவ் தருவதாக அவர் [மார்க்சு] கருதினார்.' * கிரேக்கம், இலத்தின் போன்ற செம்மை மொழிகளிலிருந்தும் செருமானிய மொழியிலிருந்தும் உரோமானிய மொழிகளி லிருந்தும் நன்கு வேறுபட்ட உருசிய மொழியில் தம்முடைய சம காலத்தவராகிய செர்னிசெவ்சுக்கி போன்ற ஓர் அறிஞனால் இந்த அளவுக்குத் தம்முடைய மொழியில் புலமைபெற முடிந்ததே யெனச் சொல்லி வியந்து சிக்ஃப்ரிட் மேயர் என்பவருக்கு மார்க்சு எழுதியதும் உண்டு *

* Marx-Engels Selected Correspondence, Progress Publishers, Moscow (1965), pp 443 and 404.

இத்தகைய மொழி உணர்வையும் மொழிப் புலமையையும் பற்றி இந்த முற்போக்குகள் என்றுவது அக்கறை காட்டிய துண்டா? இதனால்தான் இவர்களுடைய இலக்கியங்கள் காலத்தால் நிலைக்க வல்ல இலக்கியங்களாக இல்லாமல், உதிரி இலக்கியங்களாகவே தோன்றி மறைகின்றன.

தேசிய இலக்கியமாக விடுதலை இலக்கியம் :

வாழ்வியலில் ஏற்படுகிற வரலாற்று நிகழ்வுகளால் தனியாட்களும் குமுகங்களும் உளவியலும் ஒழுக்கங்களும் ஆட்படுகிற மாற்றங்களை இலக்கிய நுட்பத்துடனும் ஆழத்துடனும் தொலை நோக்குடனும் படம்பிடித்துக் காட்டி விளக்கவல்லனவே இலக்கியங்களாக நிலைக்கின்றன வெள்ளாண் வகை எனப்பட்ட இரயத்துவாரி முறையை விரிவாக்கித் தொன்றுதொட்டு வந்த காணியாட்சி முறையைத் தாமசு மன்றோ ஒழித்தபோது, தமிழக வாழ்வியலில் எற்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க மாற்றங்களை நெடும் பாடல் வடிவிலோ புதின வடிவிலோ இலக்கியமாக்கிய மரபு தற்கால தமிழ் இலக்கியத்திற்கு இல்லை. இந்த மலட்டுத்தனத்தின் தொடர்ச்சியைத்தான் இம் முற்போக்கு இலக்கியத்திலும் பார்க்கிறோம். முதலாளியம் என்னும் மேலை வாழ்க்கைத் திணை மேலிருந்து திணிக்கப்பட்ட சூழ்நிலையில், அறிவியல் பார்வையும் மெய்யியல் உணர்வும் பிறழாமல் குறுகிய துறையில் அம் முதலாளியம் விளைவித்த மாற்றங்களையெல்லாம் இலக்கியமாக வடித்தளிக்க வல்ல ஆற்றல், அதனால் இந்த முற்போக்குகளுக்கு இல்லாமல் போனது. இத்தகைய முற்போக்கு இலக்கியம் எவ்வாறு நிலைக்க முடியும்?

முற்போக்குகள் கற்பித்துச் சொல்கிற வரையறைக்கே பொருந்தாத முற்போக்கு இலக்கியத்தைக் கட்டி யழுவதனால் தமிழினத்திற்கு ஒரு நன்மையும் இல்லை. ஆகவே, நாடற்ற நாடோடித்தனமான இந்த முற்போக்கு இலக்கியத்தை விட்டொழிப்பதே நல்லது. தமிழ் மரபுடனும் வரலாற்று விளக்கத்துடனும் சூழலுடனும் முரண்பாடுகளுடனும் ஒன்றி வருகிற நுட்பமான உணர்வுகளையும் நிகழ்வுகளையும் கற்பனைகளையும் கனவுகளையும் திட்டங்களையும் இலக்கியமாக வடித்துக் காட்டுகிற விடுதலை இலக்கியம்தான் தமிழினத்திற்கு இன்று தேவை. முற்போக்கு இலக்கிய மென்னும் பெயர்ப் பலகையை மாட்டிக் கொண்டு 'அரத்தம், நரம்பு, சதை வெட்டு குத்து, கொலை' என வாயால் கரட்டுத்தனமாக அரட்டுகிற மரக்கறித்தனம் வேண்டாம். இல்லாத ஊருக்குப் போகாத வழியைக் காட்டுகிற வாயாடித்தனமும் தேவையில்லை. நாம் ஆக்க வேண்டிய விடுதலை இலக்கியங்கள் அழியா இலக்கியங்களாக வேண்டும். நம்முடைய சொந்தத் தமிழ் நாட்டினுடைய விடுதலைக்கும் மீட்சிக்கும் எழுச்சி சேர்க்கவல்ல இலக்கிய ஆற்றல் நம்மிடம் ஊற்றெடுக்க வேண்டும்.

தில்லி, பம்பாய், கல்கத்தா போன்ற வேற்று நாட்டு நகரங்களுக்குப் போய்க் குடியேறுகிற ஒரு தமிழ்க் குடும்பம் ஆட்படுகிற

தாக்கங்களையும் அக் குடும்பம் தன்னுடைய தமிழ்த் தன்மையை இழந்தும்-இழக்காமலும் வாழ்வதற்காக நடத்துகிற போராட்டங்களையும் இலக்கியமாக்கக்கூடாதா? இந்தித் திணிப்பாலும் பிற பண்பாட்டுத் தாக்கங்களாலும், தமிழினம் மெல்ல-மெல்ல அழிக்கப்பட்டு வருகிற பன்னூறு நிகழ்ச்சிகளைச் சிறுகதைகளாக்கக் கூடாதா? கருநாடகத் தமிழரை, சொந்த மண்ணிலேயே அயலாராக்கி அழிக்கப் பார்க்கிற இன அழிப்பு நிலையை எழுத்தாக்கக் கூடாதா? புதிய தொழில் நுட்பத்தின் (New Technology) வாயிலாக அயல் நாட்டு முதலீடுகள் ஊடுருவுவதால், தமிழகத்தின் நாட்டுப்புற வாழ்வியலில் தோன்றியுள்ள சீர்குலைவுகளையும், நெருக்கடிகளையும் புதினங்களாக்கலாகாதா? தமிழகத் தொழிலாளர்களிடம் ஏற்பட்டுள்ள பாட்டாளிய ஓர்மையின் முடக்கத்தையும், புதிய பார்ப்பனிய முதலாளிய உளவியல் மயக்கங்களையும் இலக்கியமேற்றக் கூடாதா? தமிழ் அறிவர்களிடம் பார்க்கிற அறிவு அடிமைத் தனத்தையும் அறிவுச் சோம்பலையும், அறிவு மலட்டுத்தனத்தையும், போலித்தனத்தையும் கதை கதையாக எழுதலாகாதா? பார்ப்பனியத்தை அதனுடைய அழிவிலிருந்து மீட்டு நிலைப்படுத்திப் புதுப்பித்து, அதை மீண்டும் ஊரில் உலவ விடுகிற புதிய பார்ப்பனிய மயக்கங்கள் நம்முடைய தமிழ்க் குமுகத்தையும், அதனுடைய தனித் தன்மையையும் அழித்து வருகிற போக்குகளையெல்லாம் வைத்துப் பன்னூறு கதைகளையும், புதினங்களையும், பாட்டிலக்கியங்களையும் படைக்கலாகாதா? இவ்வழியில் புதியன பலவாக்கித் தமிழ்த் தேசிய இலக்கியத்தை ஆக்கவேண்டாமா?

தமிழீழத்தில் சிறுகதை இலக்கியத் துறையில் தோன்றியுள்ள புதிய வளர்ச்சிகளைப் பாருங்கள். தமிழக முற்போக்குகளின் இலக்கியத் தரத்தை அது விஞ்சி நிற்கக்காணலாம். உலக அளவுக்குக் காட்டவல்ல ஒரு புதிய இலக்கியமாக, அருளரின் 'லங்கா ராணி' இருப்பதாகத் தமிழீழத் தமிழ் இலக்கியம் பெருமை பாராட்டிக் கொள்ளமுடியும். தமிழீழத் தமிழ் இலக்கியம் ஒரு தேசிய இலக்கியமாக வளரத் தொடங்கியுள்ள நிலையை இவை குறிக்கின்றன.

இத்தகைய தமிழ்த் தேசிய இலக்கியமாகிய விடுதலை இயக்கத்தை முதலாளியச் சார்பு இலக்கியமாகவோ, நடுத்தர வகுப்பின் பொழுதுபோக்கு இலக்கியமாகவோ, அக்கிரகாரத்து அரட்டை இலக்கியமாகவோ வடிக்காமல், அடிப்படை வகுப்புகளாகிய உழைக்கும் மக்களின் இலக்கியமாகவும் வடித்தெடுக்க வேண்டும். தேசிய விடுதலையைப் பெற்றுத்தந்து, தேசிய குடியாட்சியையும் ஒப்புரவு வாழ்வியலையும் அமைக்க உதவுகின்ற உளவியலுக்கும், கொள்கைக்கும் அடிகாலிடுகின்ற மக்கள் இலக்கியமாக அது மலர வேண்டும். கட்சிக் கொள்கைப் பரப்பு அரசியில் நிலை என்னும்

எதிர்ப்பாற்றலைக் குறைக்கும் நோய்!

(AIDS)

இன்று அமெரிக்கா போன்ற மேல் நாடுகளை மிரட்டி உலுக்கிக் கொண்டிருக்கும் நோய், புற்றுநோயோ, மாரடைப்போ, நீரிழிவோ இல்லை. குறிப்பாக அமெரிக்க மக்கள் அரளுவதும் மிரளுவதும் அணுகுண்டுக்கு அன்று. இன்று, மிக அண்மைக் காலத்தில் கண்டுபிடிக்கப்பெற்றுள்ள 'எயிட்சு' என்னும் கொடிய ஒரு நோய்க்குத்தான். அமெரிக்கா, பிரான்சு போன்ற நாடுகளில் உள்ள மக்கள் இந்த நோய்க்குத்தான் அஞ்சிச் சாகின்றார்கள். இந்நோய் கண்டுபிடிக்கப்பெற்றுச் சில ஆண்டுகள்தாம் ஆகின்றன. ஆனால் இந்நோயால் அமெரிக்காவில் இதுவரை ஏறத்தாழ 12000 பேர்களும், பிரான்சில் 500 பேர்களும் பிடிக்கப்பட்டிருக்கின்றார்கள்; அவர்களுள் பாதிக்கும் மேற்பட்டவர்கள் இறந்துவிட்டனர்; மிகுதிப்பேர் இருந்தும் நாள்தோறும் இறந்து வருகின்றார்கள்.

இந் நோய்க்கு 'எயிட்சு' (AIDS) என்று பெயர் சூட்டியிருக்கின்றார்கள். இது Acquired Immune Deficiency Syndrome என்பதன் சுருக்கமாகும். இதற்கு 'உடலின் நோய் எதிர்ப்பு ஆற்றலைக் குறைக்கும் நோய்' என்பதே பொருளாகும். உடலின் இயற்கையான நோய் எதிர்ப்பு ஆற்றலைக் குறைத்து உயிருக்கு உலை வைப்பதே இந்நோயின் தன்மை. இந்நோய் 'லிம்பாடெனுபதி' (Lympha Denopathy Associated Virus) என்னும் நுண் நச்சுயிரிகளால் ஏற்படுகின்றது. இதன் பெயரை (LAV) என்று சுருக்கி அழைக்கின்றார்கள். இந் நுண் நச்சுயிரிகள் மற்ற நச்சுயிரிகளைவிட அரத்தத்தில் மிகவேகமாகப் பல்கிப் பெருகுகின்றன. இந்நோய் தாக்குண்டவர்கள் இந் நச்சுயிரிகளால் இரண்டு ஆண்டுகளுக்குள் இறந்துவிடுகின்றனர். நோயால் தாக்குண்டோர் அந்த இரண்டு ஆண்டுகளும் கடுமையான கொடுமையான துன்பங்களுக்கு ஆளாகியே சாகின்றனர்.

இந்நோய் நச்சுயிரிகளைக் கண்டுபிடித்தார்களே யொழிய இவற்றைச் சாகடித்து, அறவே ஒழித்து, நோயைக் குணப்படுத்தும் மருந்துகளை இன்னும் எவரும் கண்டுபிடிக்கவில்லை. எனவே இந்நோய் வந்தால் வந்ததுதான்; அதைப் போக்கவே வழியில்லை. நோயின் தாக்கத்தைக் குறைப்பதற்குக்கூட இன்னும் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. சிறுவர்முதல் பெரியவர்கள்வரை வரக்கூடிய கொடிய நோய் இது. இந்நோயுள்ளவர்களின் மூச்சுக்

(முன் பக்கத் தொடர்ச்சி)

நிலையிலிருந்து அறுபட்டு மிக்குயர்ந்து தமிழின மீட்சியென்னும் பொதுநிலையையும் ஓர்மையும், உணர்வையும் அறிவையும் ஆற்றுப் படுத்தவல்ல விடுதலைப் புரட்சி இலக்கியமாகவும் அஃது இருக்க வேண்டும். ∴

காற்று மற்றவர்களின் மீது பட்டாலும்கூட இந்நோய் உடனே தொற்றிக் கொள்கிறதாம்.

அண்மையில் அமெரிக்காவில் ராக் அட்சன் என்னும் 58 அகவையுடைய புகழ்பெற்ற ஆலிவுட் நடிகர் இந்த நோயினால் தாக்கப்பெற்றதும், அவரைக் காப்பாற்ற எலிசபெத் டெயிலர் என்னும் புகழ்பெற்ற நடிகையுள்படப் பலரும் முயன்றதும், ஆனாலும் எந்தப் பண்டுவமும் பயனின்றி அவர் மாண்டுபோனதும் அனைவரும் அறிந்த அஞ்சத்தக்க செய்தியாகும்.

இந்நோய் நச்சுயிரிகள் உடலினுள் புகுந்தவுடன் முதலில் அரத்தத்தில் இயற்கையாக நோய் எதிர்ப்பு ஆற்றலுக்குத் துணையாய் விளங்குகின்ற வெள்ளை அணுக்களை அழித்துக்கொண்டேயிருக்கின்றன. இதனால் அந் நோயாளிக்குப் பலவகையான நோய்கள் பற்றுகின்றன.

இந்நோயால் ஒருவர் தாக்கப்பட்டுள்ளார் என்பதை எப்படி அறிவது?

நோயின் தொடக்கநிலையில் எந்த வகையான அறிகுறியும் தென்படுவதில்லை. பின் உடலின்தோல் நிறமாற்றம் அடைகிறது. அதனையடுத்துத் தோலில் படைபடையாய்த் திட்டுகள் தோன்றுகின்றன. இதைத்தான் நாம் தோல்புற்று என்கிறோம். ஆங்கிலத்தில் இதை 'கபோசி சர்கோமா' என்கின்றனர். இப்படையானது வாய், தொண்டைப்பகுதி ஆகியவற்றில் பரவி, உணவை விழுங்க முடியாமலும் பேசமுடியாமலும் செய்கிறது. இது நோயின் தாக்கத்தைத் தெரிவிக்கும் அறிகுறி. பிறகு இந்நோய் வயிற்றுக்குத் தாவுகிறது. அதனால் வயிற்றுப்போக்கு ஏற்படுகிறது. இஃது இரண்டாவது அறிகுறி. மூன்றும் நிலையில் உடலின் எடை படிப்படியாகக் குறையும். நோயாளிக்கு மயக்கம், விட்டுவிட்டுக் காய்ச்சல், உடலின் பல பகுதிகளில் வீக்கம் முதலியவை ஏற்படுகின்றன. ஒருசில மாதங்களிலேயே இவ்வாறான மாற்றங்கள் ஏற்பட்டு நோய் கடுமையான நிலையை அடைகிறது. நோயாளி கிழத்தன்மை அடைவான். மறதி ஏற்படும். பேசத்தடுமாறிப் பேச்சு குழறும். அவனையறியாத ஓர் அச்சம் ஏற்பட்டு, எல்லாரையும் திருதிருவென விழித்துப் பார்க்கச் செய்யும். இதற்குள் 'எயிட்சு' நோய் நச்சுயிரிகள் உடல் முழுவதும் பரவி, அதன் நோய் எதிர்ப்பாற்றலை முழுவதும் குறைத்து விடுகின்றன.

அரத்தத்திலுள்ள சிவப்பு அணுக்கள் நோய் வராமல் உடலைக் காத்துக் கொள்ளக்கூடியவை. வெள்ளையணுக்கள் மிகுந்த அரத்தத்திற்குச் சிவப்பு நிறத்தை அளிக்கக்கூடியவை. இவற்றில் T4 லிம்போ சைட்சு என்னும் துணைப்பிரிவு அணுக்கள் உள்ளன. இவை தொற்றுநோய் உயிரிகள் எதுவும் உடலைத் தாக்காமல் காத்துக்கொள்ளும் ஆற்றல் வாய்ந்தவை.

'எய்ட்சு' நோய் நச்சுயிரிகள் உடலுள் புகுந்ததும் வெள்ளை அணுக்களின் T4 லிம்போ சைட்சு உயிரிகளை முதலில் அழித்து

விட்டுத்தான் உடலில் குடியேறுகின்றன. விரைவில் அவை தன் இனத்தைப் பெருக்கிக் கொள்ளுகின்றன.

குருதி ஆய்வுகளின் மூலம் இந்நோய் ஒருவருக்கு வரக்கூடிய சூழ்நிலைகள் இருப்பதைத் தெரிந்து கொள்ளலாம். ஒருவரின் அரத்தத்தில் இந்த LAV நுண்ணுயிரிகள் இருப்பதாக வைத்துக் கொண்டாலும், அவருக்கு இந்நோய் வந்துவிட்டது என்று சொல்லிவிட முடியாது. நோயின் நுண்ணுயிரி இருக்கின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டவர்களில் 10 விழுக்காட்டினரை மட்டுமே இந்நோய் தாக்கியுள்ளது.

இந்நோய் உமிழ்நீர், கருநீர் (விந்து), கண்ணீர், அரத்திலுள்ள 'பிளாசுமா' என்னும் நிறமில்லா நீரின் வழியாகவும் பரவுகின்றது.

இந்நோயால் தாக்கப்படுபவர்களில் பெரும்பாலோர் தன் இனப் பாலுறவு (Homo Sexuality) உடைய ஆண்களாகவே இருக்கின்றனர். அத்துடன் விலங்குகளுடன் உடலுறவு (Beastiality) வேறுவகையான, இயற்கைக்கு மாறான வகையில் பாலுறவு கொள்பவர்கள், மட்டு மீறிய பாலுறவில் தோய்பவர்கள், வெறி மயக்க (போதை) மருந்துகளை அதிக அளவிலும் நீண்டகாலமாக மாத்திரை வடிவாக உண்பவர்கள், ஊசி வழி ஏற்றிக்கொள்பவர்கள் முதலியவர்களைத்தாம் இந்நோய் மிகுந்த அளவில் தாக்குகிறது.

ஆப்பிரிக்காவில் காணப்படும் ஒருவகை பச்சைநிறக் குரங்குகளிடமிருந்து இந்நோய் உயிரிகள் மாந்தர்களுக்குப் பரவியிருப்பதாகப் பெரும்பாலான அறிவியலாளர் கருதுகின்றனர். அத்தகைய குரங்கவில் 200 ஐ ஆய்வு செய்ததில், 70 விழுக்காட்டுக் குரங்குகளின் உடலில் இந்நோய் நச்சுயிரிகள் இருந்தன என்று கண்டுபிடித்துள்ளனர்.

இந்நோய் எப்படி மேல்நாடுகளுக்குப் பரவியது என்பது ஒரு புதிர். சிலர், நடு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான சயிர் (Zaire) நாட்டில் குடியேறிய பின்னர், மேல்நாடுகளுக்கு வந்து சேர்ந்த சயித்தி நாட்டுக் கருப்பர்கள் மூலமாகவே பரவியிருக்கலாம் எனக் கருதுகின்றனர். ஆனால், மேல்நாட்டு மக்கள் தறிகெட்டு, ஒழுக்கமின்றி வாழ்வதற்கு, இயற்கை அளிக்கும் தண்டனையே இந்நோய் என்று பலர் கருதுகின்றனர்.

இந்நோயால் பீடிக்கப்பட்டவர்களை மக்கள் ஒதுக்கித் தள்ளுகிறார்கள். அவர்களைத் தீண்டுவதற்கும் அருவருப்பு அடைகிறார்கள். சிறு குழந்தைகளும் பெற்றோர்களால் இந்நோய்க்கு ஆளாகி உள்ளனர். அமெரிக்காவில், பள்ளி மாணவன் ஒருவனுக்கு இந்நோய் இருப்பது கண்டுபிடிக்கப் பெற்றபின் அவனைப் பள்ளியிலிருந்தே விட்டிவிட்டார்கள். பல் மருத்துவர்கள் இந்நோயாளிகளை அணுகத் தயங்குகிறார்கள். முகமூடி போன்ற கருவிகளுடன் போதிய பாதுகாப்பு முறைகளைக் கைக்கொண்ட பின்னரே இந்நோயாளிகளை அணுகுகிறார்கள். உடனடி உதவிக்கு

என இயங்கும் மருத்துவ வண்டி (Ambulance) ஊழியர்களும் இந் நோய் கண்டவர்களை ஏற்றிச்செல்ல மறுக்கிறார்கள். மருத்துவ மனைகளில் பணியாற்றும் செவிலியர்கள்கூட இந்நோயாளிகளை வெறுக்கிறார்கள். மருத்துவ மனையிலிருந்து வெளியேறிய இந் நோயாளியான மனைவியை வீட்டிற்கு அழைத்துச் செல்ல கணவன் ஒருவன் மறுத்துவிட்டான்.

இந்நோயைக் குணப்படுத்த சில மருந்துகளைப் பயன்படுத்து கிறார்கள். அதில் ஒன்று HPA-23 என்பது பாரிசில் உள்ள புகழ்பெற்ற பாசுடர் நிலையம் இம் மருந்தைக் கண்டுபிடித் துள்ளது. இம்மருந்து இந்நோய் நச்சுயிரிகளைப் பெருகவிடாமல் தடுக்கின்றதே யொழிய நோயாளியைக் குணப்படுத்தவில்லை.

இந்நோய் இதுவரை, தன்னினப் பாலுறவு கொள்ளும் ஆண்களையும், வெறி மயக்க மருந்துகள் பயன்படுத்துபவர்களையும் பெரும்பாலும் தாக்கியிருப்பினும், பொதுவான மக்களையும் தாக்கக் கூடியதே என்று புள்ளி விவரத்தங்கள் தெரிவிக்கின்றன. இது கருநீர் (விந்து) வழியாகவும், அரத்தத் தொடர்பின் மூலமும் பரவக்கூடியது ஆகையால் இந்நோயாளி ஒருவருடன் உடல் தொடர்பு கொள்பவரையும், அத்தகைய ஒருவரின் அரத்தத்தை மற்றவர்க்குச் செலுத்திக் கொள்பவரையும் உடனே இந்நோய் பற்றிக் கொள்கிறது. அதனால் மேல் நாடுகளில் ஒருவர் அரத் தம் கொடுக்கும்போது LAV நச்சுயிரிகள் உள்ளனவா என்று தெரிந்துகொள்ள புதுவகையான ஓர் ஆய்வையும் செய்து பார்க்கிறார்கள்.

இதற்கு, ஆங்கில (அலோபதி) மருத்துவத்தில் இதுவரை மருந்து கண்டுபிடிக்கவில்லை என்றாலும், இந்திய மருத்துவங்க ளான சித்த மருத்துவம், ஆயுர்வேதம் ஆகியவற்றில் தக்க மருந்துகள் உண்டென்று நம் நாட்டு மருத்துவர்கள் கூறுகிறார்கள். செருமன் மருத்துவமான ஓமியோபதியிலும் இத்தகைய நோய் களை வராமல் செய்யவும், அரத்தத்தில் போதுமான வெள்ளை அணுக்களை உண்டாக்கி, உடலுக்குத் தேவையான எதிர்ப்பாற் றல்களைத் தோற்றுவிக்கவும் மருத்துவம் உண்டென்றும் கூறப் பெறுகின்றன.

(அடிப்படை: 'ஆனிமன்' இதழ்: நவம்பர் '85
'சித்தர் கருவூலம்' இதழ்' சனவரி '86)

அன்பர்கள் கவனிக்க...

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலையில் 5-மணிக்குமேல், எழுதி இசைவுபெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக்கொள்கிறோம். அமைச்சர்.

ஒன்றிய நாடுகள் அவை
(UNITED NATIONS ORGANIZATION)

1. ஒன்றிய நாடுகள் தோற்றமும் அமைப்பும் :

உலக நாடுகளுக்கென்று ஓர் ஒன்றிய நிறுவனம் தேவை என்பதை, இரண்டாம் உலகப்போர் நடைபெற்று வந்த ஆண்டு களின்போதே உணரத் தொடங்கினர். இந்த நிறுவனம் எவ்வாறு செயல்படவேண்டும், அதன் கட்டமைப்பு எவ்வகையில் இருக்க வேண்டும் என்பன போன்ற விளக்கங்களை எல்லாம் இட்லர்-எதிர்ப் புக் கூட்டணியைச் சேர்ந்த உறுப்பினர் கூடிக் கலந்துரையாடி முடிவு செய்தனர்.

அதன் விளைவாக, 1945 அக்டோபர் 24 ஆம் பக்கல் சோவி யத்து ஒன்றியம், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, சீனு ஆகிய ஐந்து வல்லரசுகளும், ஒன்றிய நாடுகள் அவையின் உறுதிக் கட்டளையை (சாசனத்தை) இறுதி செய்தன. மற்ற பெரும் பாலான உலக ஒன்றியத்தில் சேர விரும்பிய நாடுகளின் நாடாளு மன்றங்களும் அக் கட்டளை உறுதியை ஏற்புச்செய்தன.

இதன் அடிப்படையில் 1945 சூன் 26 ஆம் பக்கல் ஒன்றிய நாடுகள் அவை (United Nations Organization) நிறுவப்பெற் றது. அன்றைய நாள் 51 நாடுகளின் பகராளியர் (பிரதிநிதி) களும் சான்பிரான்சிசுக்கோவில் கூடி ஒ. நா. கட்டளை உறுதி யில் கையொப்பமிட்டனர், அன்று முதல் ஒன்றிய நாடுகள் அவை செயலுக்கு வந்தது. ஆண்டுதோறும் அக்டோபர் 24 ஆம் பக்கல் ஒ. நா. நாளாகக் கொண்டாடப் பெற்று வருகிறது.

2. தலைமைச் செயலகம் :

ஒன்றிய நாடுகள் அவையின் தலைமைச் செயலகம் நியூயார்க் கில் அமைந்துள்ளது. அச் செயலகக் கட்டடத்தைச் சுற்றிலும் பரந்த பூங்கா உள்ளது. அப் பூங்காவில் ஒன்றிய உறுப்பு நாடுகள் பல தங்கள் சார்பில் அன்பளிப்பாகக் கொடுத்த பல வேறு அழ கிய சிலைகள், பொருள்கள் வைக்கப் பெற்றுள்ளன. சில அன் பளிப்புப் பொருள்கள் கட்டிடத்தின் பல்வேறு பகுதிகளை அழகு படுத்துகின்றன. இக் கட்டிடத்தைப் பற்றிய பிற செய்திகளையும், அங்குள்ள அழகுப் பொருள்களைப் பற்றியும் கூறப் புகுமுன், ஒன் றிய நாடுகள் அவை தன் செயல்பாட்டுக்கென்று ஏற்படுத்திக் கொண்ட உறுதிக்கட்டளை பற்றிச் சில கூறியாகவேண்டும்.

3. ஒ. நா. அ.-வின் அமைப்பு : கட்டளையுறுதி (சாசனம்)

ஒன்றிய நாடுகள் அவையின் அமைப்புறுதி அதன் உறுப்பு நாடுகளின் உள்ளத்தை, விருப்பத்தை எதிரொலிக்கும் முகாமை

யான ஓர் ஆவணமாகும். நாடுகளின் இணைவமைதியையும் (சமாதானத்தையும்) ஒத்துழைப்பையும் உறுதி செய்வதற்கான வழிமுறைகளை அது தெள்ளத் தெளிவாக வரையறுத்துக் கூறு கிறது. இந்தக் குறிக்கோளை எய்தும் வழிகள் எவை என்று அவ் வாவணத்தில் விளக்கப் பெற்று உள்ளது.

அனைத்து நாடுகளின் பாதுகாப்பு நிலையின் பொருளியல், அரசியல், சட்டம் மற்றும் பிற உறுதிப்பாடுகளை வலுப்படுத்துதல் வேண்டும்; இணைவமைதிக்கு ஏற்படக்கூடிய எந்த அச்சுறுத்தலையும் தடுத்து நிறுத்தவேண்டும்; ஒழித்துக்கட்ட வேண்டும்; வன்கவர்பு (ஆக்கிரமிப்பு ச் செயல்களையும் இணைவமைதியை எல்லைமீறும் பிற செயல்களையும் ஒடுக்குதல் வேண்டும்; போர்க் கருவிப் போட்டிக்கு முடிவு கட்டவேண்டும்; படைக் குறைப்புக்கு மாறவேண்டும்; சமநிலைக் கோட்பாட்டையும் மக்களுக்குள் தன்னுறுதி (சுயநிர்ணய) உரிமையையும் மதிக்கவேண்டும்; குடியமர்த்த ஆளுமையை (காலனியாதிக்கத்தை) அதன் எல்லா வடிவங்களிலும் வெளிப்பாடுகளிலும் முற்ற முடிவாக அழித்தொழிக்க வேண்டும்; குமுகாய முன்னேற்றத்திற்கும், வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்கும் உதவவேண்டும்; ஒன்றிய நடுகள் அவையின் உறுதிக் கட்டளையைக் கண்டிப்பாகக் கடைப்பிடித் தொழுகும் அடிப்படையில் அதன் பெருமையையும், ஆற்றலையும் உயர்த்தவேண்டும் எனும் ஒ.நா. அவையின் அமைப்புறுதியை(சாசனத்தை) 'ஒப்புரவு இணைவாழ்வின் அமைப்புறுதி எனலாம். சோவியத்து ஒன்றியத்தை அமைத்துச் செயலுக்குக் கொண்டு வந்த சமயத்தில் இலெனின் 'அனைத்து மக்களுடனும் ஒப்புரவான இணைவாழ்வு' என்னும் விழுமிய கருத்தை முன்வைத்தார். இக் கருத்துக்கு அனைத்துலகப் பாரிய வடிவம் இந் நிறுவனம் எனலாம்.

4. ஒ. நா. கட்டட அமைப்புகள் :

ஒன்றிய நாடுகளின் (U. N. O.) - க்குச் செல்பவர்கள், அக் கட்டிடத்தைச் சுற்றியுள்ள பூங்காவில் உள்ள ஒரு சிற்பத்தைப் பார்த்தே ஆகவேண்டும். அந்தச் சிற்பத்திற்குப் 'போர்வாளை உழுபடையாக உருவாக்குகிறார்கள்' என்று பெயர். உலகப் புகழ்பெற்ற இச் சிற்பம் உருசியாவால் ஒன்றிய நடுகளின் அவைக்கு அன்பளிப்பாகத் தரப்பெற்றது. இதனை வடித்தவர் எவ்கெனி உச்சேதிக் என்னும் கலைஞர் ஆவார். குலைநடுங்க வைக்கும் போரின் அச்சக் கொடுமை(பயங்கரங்)களிலிருந்து, சொல்லொண்ணு மாந்த அழிவிலிருந்து இன்றைய தலைமுறையினரையும், வருங்காலத் தலைமுறையினரையும் பாதுகாப்பதே ஒ. நா. அவையின் தலையாய கொள்கையும், நோக்கமுமாகும்.

இந்தச் சிற்பம் இந்த நோக்கத்திற்கு உயிர் கொடுப்பதுபோல் அமைந்துள்ளது என்கிறார்கள்.

இனி, ஒ. நா. அவையின் கட்டிடம், அஃதாவது தலைமைச் செயலகம் உருவானதைப் பற்றிச் சிறிது தெரிந்துகொள்வோம்.

ஒ. நா. அவைக் கட்டிடத்தைக் கட்டுவதற்கு அமெரிக்க அரசு 6·5 கோடி டாலர் கடன் அளித்துள்ளது. இந்தக் கடனை ஒ. நா. தனது வரவு-செலவுத் திட்டத்திலிருந்து முறையாகத் திரும்பிச் செலுத்தி வருகிறது.

ஒ. நா. அ. கட்டிடத் தொகுதியும், பூங்காவும் அமைந்திருக்கும் 18 குறுக்கம் (ஏகர்) நிலத்தை அமெரிக்கப் பெரும் பணக்காரர்களில் ஒருவரான இராக்பெல்லர் குடும்பம், ஓர் அடையாள விலையான ஒரு டாலர்க்கு ஒ. நா. அவைக்குத் தந்துள்ளது, ஆனால்; நியுயார்க்கு நகரில் கிழக்கு ஆற்றங்கரையில் அமைந்துள்ள இந்த இடத்தை இராக்பெல்லர் குடும்பத்தினர் எண்பது இலக்கம் டாலருக்கு வாங்கினர்.

இக் கட்டிடம் கட்டி முடிந்ததும், இந்தப் பகுதியே அடையாளம் தெரியாதபடி மாறிவிட்டது. பெரிய பெரிய மாற்றங்கள் நிகழ்ந்து விட்டன. புதிய முறையில் அகலமான அழகிய நெடுஞ் சாலைகள், உணவு விடுதிகள், பிற அலுவலகங்கள், புதிய முன்னேறிய முறையில் கட்டப்பெற்ற குடியிருப்புப் பகுதிகள், விண்ணளாவிய கட்டிடங்கள் எல்லாம் தோன்றிவிட்டன. எனவே, இப்பகுதி மிகவும் மதிப்பும், வாழ்வதற்கு மிகுந்த செலவும் உள்ள பகுதியாகி விட்டது.

5. அலுவலகங்கள் :

ஒ. நா. அவையின் கட்டிடத் தொகுதி, ஒன்றுடன் ஒன்று இணைந்த மூன்று தலையாய கட்டிடங்களைக் கொண்டது.

ஒன்று, 39 மாடிகளைக் கொண்ட கட்டிடம். இங்குதான் ஒ. நா. செயலகம் அமைந்துள்ளது.

இரண்டு, ஆற்றுக்கு இணைகோடாகப் பரந்திருக்கும் மாநாட்டுக் கட்டிடம் பாதுகாப்புக் குழு, பொருளியல், குமுகாயக் குழு, அறவியல் குழு ஆகியவற்றின் கூட்டங்கள் நடைபெறும் மண்டபங்கள் இதில் உள்ளன.

மூன்று, கவிகை மாடம்போல் அமைந்த பொது அவைக் கட்டிடம், நிறை அவைக் (Plenum) கூட்டத் தொடர்கள் நடைபெறும் மாபெரும் மண்டபம், அவையின் குழுக் கூட்டங்கள் கூடும் மன்றங்கள் ஆகியன கூடுவதற்கென அமைந்தது. ஒ. நா. அவைக்கெனத் தனி நூலகக் கட்டிடப் பகுதியும் இவற்றுள் உண்டு.

புகழ்பெற்ற அமெரிக்கக் கட்டிடக்கலைத் திறவோரான வாலசு கே. ஆரிசன் மேற்பார்வையில் ஒ. நா. கட்டிடத் தொகுதி நிறுவப்பெற்றது. இத் தொகுதியைக் கட்டும் பொறுப்பு பெருவலிக் கட்டிடக் கலைஞர்கள் அடங்கிய ஓர் அனைத்துநாட்டுக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. பிரான்சைச் சேர்ந்த சார்லசு எட்வர்டுலி கொர்புசயர், பிரேசிலைச் சேர்ந்த ஆசுகார் நியமயெர் போன்ற தலைசிறந்த கட்டிடச் சிற்பிகள் இந்தக் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

6. கட்டட அழகுக்கு உலகநாடுகளின் அன்பளிப்புகள் :

பொது அவைக் கட்டிடத்தின் மூகாமையான முகப்புக் கூடத்தின் முன் மிகப்பெரும் உருக்குக் கதவுகள் அமைக்கப் பட்டுள்ளன; இவை ஒ. நா. அவைக்குக் கனடா அளித்த பரிசு; இவற்றுக்கு வலப்புறம் மணியடிக்கும் ஊசல் மணி உள்ளது; இது நெதர்லாண்டு தந்த வெகுமதி. இஃது எந்த நேரமும் அசைந்து காலம் கடுகிக் கொண்டிருக்கிறது என்பதைக் காட்டுகிறது. இடப் புறம் சீயசின் வெண்கலச் சிலை ஒன்று அமைந்துள்ளது; கிரீசின் நன்கொடை இது. கூரைக்குக் கீழே, சோவியத்து ஒன்றியம் செலுத்திய உலகின் முதலாவது செயற்கைத் துணைக் கோளின் மாதிரி வடிவம் தொங்கிக் கொண்டிருக்கிறது. இது சோவியத்து அரசு ஒ. நா. பேரவைக்கு வழங்கிய பரிசாகும்.

கூடங்களைக் கடந்து மின்சாரச் சுழல்படிக்கட்டுகளின் மீது மூன்றாவது மாடிக்குச் சென்றால், அங்குப் பொது அவைக் கூட்டங்கள் நடைபெறும் மாபெரும் மண்டபத்தைக் காணலாம். அதன் இரு சுவர்களும் புகழ்பெற்ற பிரஞ்சுப் பொதுவுடைமை ஓவியர் பெர்னாண்டு லெகரால் அழகுசெய்யப்பட்டுள்ளன. இந்த மண்டபத்தில் 2500 பேர் அமரலாம். சிலகாலத்துக்கு முன் பாதி மண்டபத்தை நிரப்பும் அளவுக்குத்தான் உறுப்பினர்கள் இருந்தனர்; இப்போது கூட்ட மண்டபம் பெரிதும் நிரம்பி வழிகிறது.

7. உறுப்பாண்மை நாடுகளும் செயற்பாடுகளும் :

ஒ. நா. அவை அமைக்கப்பட்டதிலிருந்து 100க்கு மேற்பட்ட புதிய உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்; இப்பொழுது ஒ.நா. நிறுவனத்தில் 159 நாடுகள் உறுப்பாண்மை பெற்றிருக்கின்றன. ஒவ்வோர் ஒ. நா. உறுப்பு நாட்டுக்கும் ஓர் ஒப்போலைதான் உண்டு. கைகளை உயர்த்துவது உட்பட பல்வேறு முறைகளில் ஒப்பெடுப்பு நடத்தப்பெறுகிறது; அண்மை ஆண்டுகளில், ஒப்புதல்கள் எண்ணுவதற்கு மின்னணுவியல் முறை புகுத்தப்பட்டுள்ளது.

பொது அவையின் ஆண்டுக் கூட்டத் தொடர்கள் செப்டம்பரில் மூன்றாவது செவ்வாய்க் கிழமை தொடங்குகிறது. அடுத்த முறையான கூட்டத்தொடர் தொடங்கும் பக்கலை அது தொடங்கு

வதற்கு 60 நாள்களுக்குப் பிற்படாமல் ஒ.நா. தலைமைச் செயலர் ஒ.நா. உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கிறார். ஒ.நா. பொது அவையின் முறையான கூட்டத் தொடர்கள் பொதுவாக, ஏறத்தாழ மூன்றுமாதங்கள் நீடிக்கின்றன. எடுத்துக்காட்டாக,ஒ.நா. பொது அவையின் 38-ஆவது கூட்டத்தொடர் (1983) 13 கிழமைகள் நடைபெற்றது. அதன் நிகழ்ச்சி நிரலில் 144 செய்திகள் இடம் பெற்றிருந்தன; அது 456 தீர்மானங்களை நிறைவேற்றியது.

பல சூழல்களில் நாளுக்கு மூன்று நீண்ட கூட்டங்கள் நடைபெறுகின்றன. இவை பெரும்பாலும் இரவு வரை நீடிக்கின்றன, காரிக்கிழமைகளிலும் உறுப்பினர்கள் கடுமையாகப் பணியாற்றுகின்றனர்; கூட்டத்தொடர் அதிகார முழுமையாக முடிவடையும் கடைசி நாளன்று பணி நள்ளிரவு கழித்து அதிகாலைவரைகூட நடைபெறுகிறது;

8. குழுக்களின் அதிகாரப் பகிர்வுகள் :

ஒ. நா-வின் முதல் குழு, படைக்குறைப்புத் தொடர்பான சிக்கல்களையும், அனைத்துநாட்டுப் பாதுகாப்புக் குறித்த சிக்கல்களையும், ஆராய்கிறது. சிறப்பு அரசியல் குழு, முதல் குழுவின் அதிகார வரம்புக்கு அப்பாற்பட்ட, அரசியல் தன்மை கொண்ட பிற சிக்கல்களைக் கையாள்கிறது.

இரண்டாவது குழு, பொருளியல், தொகைச் சிக்கல்களில் கவனம் செலுத்துகிறது,

குமுகச் சிக்கல்களும், மாந்தநேய மற்றும் பண்பாட்டுச் சிக்கல்களும் மூன்றாவது குழுவின் அதிகார வரம்புக்குட்பட்டவையாகும்,

நான்காவது குழு குடியேற்ற வல்லாண்மையை ஒழித்துக் கட்டும் சிக்கல்களைப் பற்றிக் கவனிக்கிறது.

ஐந்தாவது குழு ஆளுமைச் சிக்கல்களையும், வரவு செலவுத் தொடர்பான புலனங்களையும் ஆராய்கிறது.

ஆறாவது குழு சட்டத்தொடர்பான சிக்கல்களுக்குப் பொறுப்பாக உள்ளது'

9. பொது அவையின் அதிகாரமும் பொறுப்பும் செயற்பாடும் :

பொது அவையில் ஒவ்வொரு கூட்டத் தொடரும் பொதுக் குழுவை அமைக்கிறது. இது நிறுவனச் செய்திகளைக் கவனித்துக் கொள்கிறது. கூட்டத்தொடரில் தகுதிக் கூறுகளை ஆயும் குழுவும் அமைக்கப்பெறுகிறது. சிறப்புக் கூட்டத்தொடர்களும், இன்றியமையாத கூட்டத் தொடர்களும் நடைபெறும்போது, பொது அவை நிறையவைக்(பிளீனம்)கூட்டங்களை மட்டுமே நடத்துகிறது. குறிப்பிட்ட கூட்டத்தொடர் எந்தச் சிக்கலுக்காகக் கூட்டப்பெற்றதோ அந்தச் சிக்கல்களை மட்டுமே ஆராய்கிறது.

ஒ. நா. பொது அவையின் கூட்டத் தொடர்கள் மிகப்பெரும் அவைகளாக அமைகின்றன; பல்வேறு அரசியல் சிக்கல்களை ஆராய்வதற்கு உறுப்பினர் நாடுகளுக்கு வாய்ப்பளிக்கின்றன; தீர்வை எதிர்நோக்கும் தலையாய சிக்கல்களைப் பிரித்து விளக்கு கின்றன; கூட்டு முயற்சிகளின் மூலம் அனைத்து நாட்டு ஒத்துழைப் புக்கு உள்வேகம் அளிக்கின்றன.

ஒ நா. அமைப்புறுதியின்படி, எந்த ஒரு சிக்கலைப் பற்றியும் ஆராய்வதற்கும், தொடர்புள்ள நாடுகளுக்கும் பாதுகாப்புக் குழுவுக்கும் தனது அதிகார வரம்புக்குட்பட்டுப் பரிந்துரைகள் செய்வதற்கும் பொது அவைக்கு உரிமை உண்டு.

உலக அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநாட்டுவது தொடர்பாகப் பரிந்துரைகள் செய்வதுபோன்ற மிக முகாமைச் சிக்கல்கள் குறித்துப் பொது அவையில் முடிவெடுப்பதற்கு, அவையில் வருகை தந்து ஒப்பெடுப்பில் (வாக்கெடுப்பில்) கலந்து கொள்ளும் உறுப்பினர் நாடுகளின் மூன்றில் இரண்டு பெரும் பான்மை வேண்டும்.

பொது அவையின் நடைமுறை நெறிகளின்படி, ஒப்பெடுப்பில் கலந்துகொள்ளாத நாடுகளின் ஒப்போலைகள் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படமாட்டா. இதனால், பெரும்பாலான நாடுகள் ஒப்பெடுப்பில் கலந்துகொள்ள விட்டாலும் அவையில் ஒரு முடிவை எடுக்க முடியும்.

பொது அவைக் கட்டிடம் பாதுகாப்புக் குழு, பொருளியல், குமுகாயக் குழு, அறவியல் குழு ஆகியவை அமைந்துள்ள கட்டிடத்துடன் இணைந்துள்ளது. இம் மூன்று குழுக்களின் கூட்ட மண்டபங்களும் தமக்கே உரிய தனிச்சிறப்பு வாய்ந்த வடி வமைப்புகள் கொண்டவை ஆகும்.

10. பாதுகாப்புக் குழுவின் சிறப்புகளும், அதிகாரங்களும் :

ஒ. நா. அவையின் தலைசிறந்த அமைப்பு, பாதுகாப்புக்குழுவே ஆகும்.

எல்லா உறுப்பு நாடுகளையும் கட்டுப்படுத்தக்கூடிய முடிவு களை எடுக்கும் உரிமையையும், ஒப்புரவு அமைதியைப் பாது காக்கவோ, நிலைநாட்டவோ நடவடிக்கைகள் மேற்கொள்ளும் உரிமையையும், ஒ. நா. அமைப்புறுதியின் (சாசனத்தின்) படி பெற்றுள்ள ஒரே அமைப்பு, பாதுகாப்புக் குழுவே ஆகும்.

பாதுகாப்புக் குழு பொது அவைக்கு எவ்வகையிலும் கீழ்ப் பட்டதன்று. அது தனது சொந்த நடைமுறை நெறிகளின்படி முழுத் தன்னுரிமையுடன் செயல்படக் கூடியது.

பிற ஒ. நா. அமைப்புகளைப் போலல்லாமல், தன்னுடைய நடவடிக்கைகள் துறைத் தொடர்பான உறுதிக் கட்டளையின்

பகுதிகளையே திறனாய்வு செய்வதற்குப் பாதுகாப்புக் குழுவிற்கு அதிகாரம் உண்டு.

அது மட்டுமன்று, எந்த முடிவுகளை மேற்கொள்வதிலும் பொது அவையின்-அல்லது வேறு எந்த முகாமையான ஒ. நா. அமைப்புகளின் உடன்பாட்டையோ, இசைவேற்பையோ (அங்கீகாரம்) அது பெறவேண்டிய தேவையில்லை,

பாதுகாப்புக் குழு என்பது ஒ. நா.-வில் நிலையாகச் செயல்படும் குழுவாகும்.

உலக அமைதியையும், பாதுகாப்பையும் நிலை நாட்டும் பொறுப்பு இதற்கு உண்டு.

இதில் பதினைந்து நாடுகள் உறுப்பாண்மை பெற்றுள்ளன. அவற்றுள் சோவியத்து ஒன்றியம, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, சீனு ஆகிய ஐந்து நாடுகள் நிலையான உறுப்பாண்மை பெற்றுள்ளன. மற்ற 10 நாடுகள் தற்காலிக உறுப்பாண்மை பெறுகின்றன. இவை இரண்டாண்டுக் காலத்துக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப் பெறுவன.

அ. 'வீட்டோ' அதிகாரம் :

பாதுகாப்புக் குழு எடுக்கும் எந்த ஒரு முடிவையும் 15 உறுப்பு நாடுகளில் ஒன்பது உறுப்பு நாடுகள் ஏற்று ஒப்புதல் தரவேண்டும். அந்த ஒன்பது உறுப்பு நாடுகளுள் மேற்கண்ட ஐந்து நிலையான நாடுகளும் ஒப்புதல் தருவது இன்றியமையாதது. ஒரு தீர்மானத்தை அல்லது முடிவை உறுப்பு நாடுகள் ஆதரித்து ஒரு நிலையான உறுப்புநாடு ஒப்புதல் தராவிட்டாலும் அல்லது எதிர்த்தாலும், அத் தீர்மானம் அல்லது முடிவு தோல்வியுறும். ஐந்து வல்லரசு நாடுகளுக்கும் உள்ள இந்த அதிகாரமே 'வீட்டோ' நீக்க (ரத்து) அதிகாரம் (VETO) எனப்பெறும்.

அமெரிக்காவின் தலைமையிலுள்ள வல்லரசிய (ஏகாதிபத்திய) ஆற்றல்கள், இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒ. நா. வின் பல நல்ல முடிவுகளுக்குத் தடையாக இருப்பதுடன் இந்த அமைப்புக்கும் கேடு செய்வதாக உருசியா குற்றஞ்சாற்றுகிறது.

11. ஒ.நா.வின் அலுவலகப் பணி நிலைகள் :

ஒ நா.வின் அன்றாடப் பணி அதன் செயலகத்தால் நிறைவேற்றப் பெறுகிறது. இதில் ஏறத்தாழ பதினாறாயிரம் (16000) பேர் பணியாற்றுகின்றனர். இவர்களின் இயல்பான அலுவலகவில், கூட்டத் தொடர்களுக்கும், கூட்டங்களுக்கான பதிவேடுகளை அணியப்படுத்துவதும் அடங்கும்.

இவ்வலுவலகத்தின் பணிவீச்சு பெருவியப்புக்குரியதாகும். ஒ. நா. அணியப்படுத்தும் பதிவேடுகள், உரிமை ஆவணங்கள்

இவற்றின் சரிவகு (சராசரி) ஆண்டு எடை 2.4 0 கல்லெடை (டன்)களை எட்டுகிறது. இதிலிருந்தே ஒ நா. செயலகத்தின் பணிச் சுமையின் மாபெரும் பரும அளவைத் தெரிந்து கொள்ளலாம்.

அ. அலுவல் மொழிகள் :

மொழிபெயர்ப்பு மற்றும் விளக்கப்பணி, செயலகத்தின் பொறுப்பிலுள்ளது: பொது அவையிலும் அதன் அமைப்புக் குழுக்களிலும், துணைக் குழுக்களிலும் ஆங்கிலம், இசுப்பானியம், (Spanish), சீனம், உருசியம், பிரெஞ்சு ஆகிய ஐந்து மொழி களே அதிகார முழுமையான அலுவல் மொழிகளாகப் பயன் படுத்தப் பெறுகின்றன. பொது அவையிலும் அதன் முகாமைக் குழுக்களிலும் அரபியும் அதிகார முழுமையான அலுவல் மொழியாக உள்ளது. இந்த ஆறு மொழிகளில் எந்த மொழியில் நிகழ்த்தப்பெறும் உரைகளும் பிற ஐந்து மொழிகளில் ஒரே காலத்தில் மொழிபெயர்க்கப் பெறுகின்றன. (பொது அவையி லும் அதன் முகாமைக் குழுக்களிலும் மட்டுந்தான் அரபியை அதிகார மொழியாகப் பயன்படுத்தலாம்என்பதைக் கவனிக்கவும்.)

ஆ. தலைமைச் செயலாளர் பொறுப்புகள் :

செயலகத்துக்கு ஒ. நா. தலைமைச் செயலாளர் தலைவராக உள்ளார். இவர் பாதுகாப்புக் குழுவின் பரிந்துரையின் அடிப் படையில் பொது அவையால் தேர்ந்தெடுக்கப் பெறுகிறார்.

தலைமைச் செயலாளரின் பொறுப்பை ஒ. நா.வின் அமைப் புறுதி, திட்டவட்டமாக அதன் 99-ஆவது நெறிமுறையில் வரை யறுத்துள்ளது.

'அனைத்துலக இணைவு அமைதிக்கும் பாதுகாப்புக்கும் அச் சுறுத்தல் ஏற்படுத்தக் கூடியதெனத் தாம் கருதும் எந்தச் செய்தியையும், தலைமைச் செயலாளர் பாதுகாப்புக் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவரலாம்' என்பது அந்நெறிமுறையாகும்.

ஒ. நா. அமைப்புறுதிப்படி, தலைமைச் செயலாளர் என்பவர் ஒ நா. அவையின் தலைமை ஆளுமையரே தவிர வேறானவர் அல்லர். எனவே, அவரை ஒ.நா.வுக்கும் மேற்பட்ட ஓர் அனைத் துலக அரசியல் பெருமகராக (பிரமுகராக) உருவகித்துக் காட்டும் முயற்சியும் நெறிமுறைகளுக்கு முரணானதாகும். தலைமைச் செயலாளர் ஓர் ஆளுமையாளர் (நிர்வாகி) என்ற முறையில்தான் செயல்பட வேண்டும் என்று ஒ. நா. அமைப்புறுதி திட்டவட்ட மாக வரையறுத்துள்ளது. இந்தத் தன்மை அவருக்குத் தனியான சிறப்புத் தன்மையை வழங்கிவிடவில்லை,

அனைத்து ஒ.நா. அவையின் உறுப்பாண்மை நாடுகளுக்கும் சமச்சரியான வாய்ப்புகள் அளிக்கும் வகையில், ஒ.நா. நாடுகள் நிறுவனத்தின் முகாமை அமைப்புகள் திறம்படச் செயல்படும்

இருபதினாயிரம் ஆண்டுகள் பழைமை உடையது தமிழரின் இசை அறிவு!

(சென்னை, அரசர் அண்ணாமலை மன்றத்தில், தமிழிசைக் கழக ஆதரவில் நடந்த பண் ஆராய்ச்சியின் முப்பத்து ஆறும் கூட்டத்தைத் தொடக்கி வைத்துக், கடந்த 22-12-85-ஆம் நாளில், திருக்குறள் வீ. முனிசாமி ஆற்றிய கருத்துரையின் சுருக்கம், இது. இதில் தமிழிசை மரபின் தனித்தன்மைகள் சிலவும் வரலாற்றுச் சிறப்பியல்களும் தொகுத்துரைக்கப் பெறுவதால் இதனை இங்கு மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம். இக் கருத்துரை, ஏற்கனவே இந்து, தினமணி, நாளிதழ்களில் வெளிவந்துள்ளன.)

தமிழிசை - மக்கள் இசை :

துன்பத்தில் மூழ்கித் தொல்லைப்படும் ஏழை எளிய மக்களுக்கும் மகிழ்ச்சி தரக்கூடிய புதிய பாடல்கள் தேவை. நடைமுறைச் சிக்கல்களுக்குத் தீர்வுவழி காட்டும் முற்போக்குக் கருத்துகள் கொண்ட பாடல்களும் தேவை. அவ்வகைப் பாடல்கள் நிரம்ப இசையமைத்துப் பாடப் பெறுவதினாலேயே 'தமிழிசை இயக்கம்' 'மக்கள் இசை இயக்க'மாக மாறி வெற்றிபெற முடியும்.

தமிழ்ப் பண் வளர்ச்சிக்கான எதிர்காலத் திட்டங்கள் :

தமிழ்ப் பண்களின் அடிப்படையில் தமிழ் இசைப் புலவர்கள் பலரைப் புதிய இசைப் பாடல்களை இயற்றச்செய்து, அவற்றை ஆண்டுதோறும் இப் பண் ஆராய்ச்சிக் கூட்டத்தில் அரங்கேற்றம் செய்யவேண்டும். அத்தகைய, புதிய பாடல்களைத் தமிழிசைக் கல்லூரி மாணவர்களுக்குச் சொல்லித்தர ஏற்பாடு செய்து, இளைஞர்களையும் அவற்றின்பால் ஈர்க்கவேண்டும். புதிய பாடல்களை முதிர்ந்த இசைவாணர்கள் மூலமும் தமிழகமெங்கும் பரப்ப ஆவனசெய்ய வேண்டும். மேலும் திருக்குறள் பாடல்களில் உள்ள கருத்துகளையும் இசைப்பாடல்களாக்கி அவை நாடெங்கும் வலம் வரச் செய்யவேண்டும்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

படியாகப் பார்த்துக்கொள்ளும் பொறுப்புகளை, ஒ. நா. அமைப் புறுதி தலைமைச்செயலாளரிடம் ஒப்படைத்துள்ளது.

இதுவரை பதவி தாங்கிய ஒ. நா. பொதுச் செயலாளர்கள்:

எண்	பெயர்	நாடு	பதவிக்காலம்
1.	திரிக்வி லை	நார்வே	1946-1953.
2.	டாக் ஆமர் சோல்டு	சுவிடன்	1953-1961.
3.	யூ தாண்ட்டு	பர்மா	1961-1971.
4.	குர்த் வால்தீம்	அசுட்டிரியா	1972-1981.
5.	பெரசு டி. குயெல்லர்	பெரு	1982 சனவரி 1 முதல்.

[தொடரும்]

வள்ளுவரும் பண்ணும் :

'பண்ணென்னும் பாடற் கியைபின்றேல் கண்ணென்னும்
கண்ணோட்ட மில்லாத கண்'

— என்று 573-ஆம் குறளிலே உலகியல் வாழ்க்கைக்கு அடிப்படையாகிய கண்ணோட்டத்தை விளக்குவதற்காகத் திருவள்ளுவர், அக்காலத் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு நன்கு தெரிந்த ஒன்றாகிய 'பண்'ணை உவமையாக எடுத்தாளுகிறார்; எனவே 2000-ஆண்டுகளுக்கு முன்பே இன்னின்ன பாடலை இன்னின்ன பண்ணில் பாடினால்தான் பொருளும் சுவையும் நன்கு வெளிப்படும் என்னும் அளவுக்குப் பண் பொருந்துமாறு தமிழ்நாட்டின் இசை வளர்ந்தோங்கியிருந்தது என்ற உண்மை இதன் மூலம் அறியக் கிடக்கின்றது.

மற்றொரு குறளில் திருவள்ளுவர் :

'குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்'

— என்று குழந்தைகளின் மழலைச்சொல்லின் இனிமையை விளக்குவதற்குத் தமிழகத்தின் இசைக் கருவிகளாகிய குழலையும், யாழையும் உவமைகளாகத் தேர்ந்தெடுக்கிறார். அந்த அளவுக்குத் தமிழ்நாட்டின் இசைக் கருவிகளும் 2000 ஆண்டுகளுக்கு முன்பே மக்களுக்கு அறிமுகமாகியிருந்தன;

இசைக் கருவிகளை வாயால் ஊதி இசைக்கும் கருவிகள், கைகளால் மீட்டி இயக்கும் கருவிகள் என இருபெரும் பிரிவுகளாக வகைப்படுத்தலாம்; முறையே அவை ஒவ்வொன்றுக்கும் முதன்மையான குழலையும் யாழையும் இங்கு உவமைகளாக எடுத்தாளுகிறார்.

அது மட்டுமன்று, இசைக் கருவிகளைத் துளைக் கருவிகள், நரம்புக் கருவிகள், தோற் கருவிகள், கஞ்சக்கருவிகள் என நான்கு பெரும் பிரிவுகளாகத் தமிழர்கள் அந்நாளிலேயே வகைப்படுத்தி வைத்திருந்தனர். அவற்றுள் தோற்கருவி(ஆர்மோனு)களும், கஞ்சக் கருவிகளும் இசைக்குரிய தாளத்துக்கும், இணைகைக்கும் மட்டுமே பயன்படக்கூடிய துணைக்கருவிகளாகும்; ஆனால் துளைக்கருவிகளும், நரம்புக் கருவிகளும் இசைக்குத் துணைக் கருவிகளாக இருப்பதோடு பண்ணிசைக்கவும் கூடிய தனிக் கருவிகளாகவும் விளங்குகின்றன என்பது அதன் குறிப்பாகும். எனவேதான் பண்களையும் தனியாக இசைக்கக்கூடிய கருவிகளுக்கு முதன்மையான யாழையும் குழலையும் உவமைகளாக இங்குத் திருவள்ளுவர் எடுத்தாளுகிறார்.

கடைக் கழகக் காலம் :

கடைக் கழகக் காலத்திற்கும் முன்பே, தொல்காப்பியம் எழுந்த கடைக் கழகக் காலத்திலும் தமிழ்ப் பண்கள் சிறப்புற்றிருந்தன என்பதற்கும் சான்றுகள் உள்ளன. தொல்காப்பியச் செய்யுளில் 173 ஆம் நூற்பாவில்,

'பாட்டிடைக் கிடந்த பொருளவாகிப்
பாட்டின் இயல்பே பண்ணத்தி இயல்பே'

என்று தொல்காப்பியர் கூறுகின்றார். பண்ணத்தி என்பது பண்ணை ஒட்டிப்பாடும் இசைப் பாடலைக் குறிப்பதாகும்.

மேலும், அந்நூலின் அகத்திணையியல் 20 ஆம் நூற்பாவில் ஐந்து வகையான நிலங்களுக்கும் உரிய கருப்பொருள்களை,

'தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகைப் பிறவுங் கருவென மொழிப'

என்று தொல்காப்பியர் பட்டியல் போட்டுக் காட்டுகிறார்.

எனவே, ஒவ்வொரு வகையான நிலத்துக்கும் ஒவ்வொரு வகையான பறையும் யாழும் உள்ளதென அவர் குறிப்பிடுவதைக் கொண்டு, இடைக் கழகக் காலத்திலுங்கூடப் பண்களும், பண்களின் அடிப்படையில் அமைந்த தமிழிசையும், இசைக் கருவிகளும் சிறப்புற்று விளங்கினமை புலனாகின்றது.

பண்டைக் காலத்தில் இசைப் பாடல்கள் செந்துறை, வெண்டுறை, வரி, உரு முதலிய பெயர்களில் விளங்கின. தற்போது கருநாடக இசையில் 'கீர்த்தனம்' என்றழைக்கப்படும் இசைப் பாடல், தொல்காப்பியத்தில் கூறப்படும் 'உரு' என்ற வகையைச் சேர்ந்ததாகும்.

தலைக் கழகக் காலம் :

இடைக் கழகக் காலத்துக்கும் முன்பு, தலைக் கழகக் காலத்திலேயே எத்தனையோ பரிபாடல்களும், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை என்னும் நூல்களும் இருந்தனவென்று இறையனார் களவியலுரை ஆசிரியர் கூறுகிறார்.

இன்னும் பஞ்ச பாரதீயம், இசை நுணுக்கம், பஞ்ச மரபு, இந்திர காவியம், மதிவாணன் நாடகத் தமிழ் நூல், அகத்தியம், பரதம், தாள வகையோத்து, பரத சேனாபதியம், பதினாறு படலம் போன்ற நூல்களும் தலை, இடை, கடைக் கழகக் காலங்களில் இருந்துள்ளன.

அது மட்டுமல்லாமல், முக் கழகங்களிலும் இயல், இசை, நாடகம் என்னும் மூன்று பிரிவுகளும் இருந்தன எனவும் கருதப்படுகிறது.

நளவெண்பாவில் வரும்,

'ஆதி வடிவலம்ப நின்றாலும் அன்றொரு கால்
ஏழிசைநூற் சங்கத் திருந்தாலும்'

என்னும் செய்யுள் பண்டைக்காலத்தில் இசைக்கெனத் தனிக் கழகமே இருந்ததெனக் கூறுவதாகும்.

சிந்துவெளி நாகரிகம் :

இலக்கியங்கள் மட்டுமல்லாமல், அகழ்வாராய்ச்சிகள் கூடப் பல உண்மைகளை நமக்குத் தெரிவிக்கின்றன. 13 ஆம் நூற்றாண்டு வரையிலும் இத் துணைக்கண்டம் முழுவதும் ஒரே இசை

முறைதான் நிலவி வந்ததென்றும், அதுதான் இன்று தென்னிந்தியாவிலே 'கருநாடக இசை' என்னும் புதுப்பெயரில் வழங்கிவரும் இசை முறை என்னும் இசை ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். அதற்குச் சான்றாக ஏறத்தாழ 5,000 ஆண்டுகளுக்கும் முற்பட்ட சிந்துவெளி நாகரிகத்தில், அண்மையில் கண்டெடுக்கப்பட்டுள்ள பல முத்திரைகளில் தமிழ்நாட்டு இசைக் கருவிகளாகிய யாழும், குழலும் காணப்படுகின்றன; தமிழ்நாட்டுக் கோயில்களில் உள்ள நாட்டியப் பாவை போன்ற ஒரு நடனப் பெண் சிலையும்; ஆண் சிலையும் கூட கிடைத்துள்ளன.

அவ்வாறு, இசையும் - நடனமும் வளர்ச்சியுற்றதொரு நிலையில் அங்குக் காணப்பட வேண்டுமெனில், அதைப்போலக் குறைந்தது மூன்று மடங்குக் காலத்திற்கு முன்பே; அவை தோன்றி நாளடைவில் வளர்ச்சியுற்றிருக்க வேண்டும் என்று அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். ஆகையால், தமிழகத்தின் இசை 20,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதென நாம் அறியலாம்.

ஆனால், பிற நாடுகளின் வரலாற்றிலோ 1,200 ஆண்டுகளுக்கு முன்பு, தேர்ந்த இசை முறை இருந்ததாகச் சான்று இல்லை. உலகிலேயே வேறு யாரும் காணாதவகையில், தம் மொழியையே இயல், இசை, நாடகம் என முப்பெரும் பிரிவுகளாகக் கண்டவர்கள் தமிழர்கள். அதிலும் இசைக்கு நடுவிடம் அளித்துப் போற்றி வந்துள்ளனர்.

இசை மரபு காக்க ஆராய்ச்சி :

பண்ணிசை வளர்ந்தால்தான், தமிழிசையும் தழைத்தோங்க முடியும் என்பதை நன்குணர்ந்த அண்ணாமலையரசர் பழந்தமிழ்ப் பண்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து உண்மையை உலகுக்கு உணர்த்துவதற்காகத் தமிழிசைக் கழகத்தின் துணையில் 1949 ஆம் ஆண்டு முதல், பண் ஆராய்ச்சிப் பணியையும் தொடங்கினார். தொடர்ந்து பண் ஆராய்ச்சிக் கூட்டம் நடைபெற்று வருகின்றது.

ஒரு குமுகாயத்தின் பண்பாட்டை எடுத்துக் காட்டுவன அதன் கலைகளேயாகும். எனவே, நாம் தமிழ்ப் பண்களுக்கு மீண்டும் உயிரூட்டித் தமிழிசையை வளர்க்க விரும்புவது, தமது பண்பாட்டை உயர்த்துவதற்காகத்தான்! ஆகையால் பாட்டு மட்டும் தமிழாக இருந்தால் போதுமானதாகி விடாது! தமிழரின் இசை மரபும் காக்கப்பட வேண்டியது இன்றியமையாததாகும்; அதற்குத் தமிழ்ப் பண்களைப் பற்றிய ஆராய்ச்சி மிகவும் முக்கியமானதாகின்றது.

இசையின் நோக்கம் அறிவையும், உள்ளத்தையும் இணைத்து இன்பமூட்டுவதே. ஒகிகள் எல்லா பொறிகளையும் அடக்கி உள்ளக் கிழியில் இறைவன் உருவெழுதிட உற்று நோக்கி தம் மெய்ம்மங்களில் மேலாய் விளங்கும் நாத நுட்பத்தைக் கண்டு திளைக்கின்றனர். ஒலியுடன் பெருமகிழ்ச்சி பேரொளியையும் அவர்கள் கேட்கின்றனர்,

கொய்யாக்கனி

நாடக ஆக்கம் : அதியமான்.

[பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் பாவியம்]

குடி-3 (குடியாதவனைச் சுட்டிகாட்டி) இவரு குடிக்கமாட்டாரோ? ஏனய்யா நீர் குடிக்கமாட்டீரோ?

குடியா : ஆம். நான் குடிக்கமாட்டேன்.

குடி-3 நீர், அரசுக்கு இரண்டகம் செய்கிறீர். உம்மைச் சிறை யில் தள்ளவேண்டும்;

குடி-4 (குடியாதவனைப் பார்த்து) நீரும் குடிக்கவேண்டும், அல் லது உம்மைக் கட்டாயம் சிறையில் போட்டு அடைக்க வேண்டும்.

மற்றவர் : ஆமாம்; ஆமாம் இவரும் குடிக்கவேண்டும்!

குடியா : நான் குடிக்கமாட்டேன். நான் படித்தவன்.

குடி-3 அப்படி வா! படித்தவர்கள் குடியாமல் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் மதுக்கடைகளை அரசே நடத்திப் படித் தவர்களை அங்கு வேலைக்கு அமர்த்தப் போகிறார்கள்.

குடி-4 அப்படியானால் அவர்கள் நாகரிகமாய்க் குடிப்பார்கள்.

குடி-3 அதுமட்டும் இல்லை; இன்னொன்று தெரியுமா? உனக்கு:

குடி-4 என்ன அது?

(முன் பக்கத் தொடர்ச்சி)

பண்ணோடு பொருந்திய இசை, அதைக் கேட்பவர் மனத்தை ஒருமுகப்படுத்துகின்றது; பெரும் மகிழ்ச்சியை உண்டாக்குகின் றது! அதனால்தான் பண்டை நாளில் தமிழ்ப் பெருங்குடியினர், ஒவ்வொரு வகை நிலத்துக்கும் ஏற்ற பண்ணையும் அமைத்துவைத் தார்கள். இசையால் மாந்தன் மட்டுமன்றி விலங்கு, பறவை, மரம், செடி கொடிகளும்கூட வளம்பெறும் என்பது ஆராய்ச்சி யாளர்கள் கண்டுள்ள உண்மையாகும். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அத்தகைய ஆராய்ச்சியை மேற்கொண்டு பெருவங்கிய (நாதசுவர) இசை மூலம் பயிரை வளர்த்துக் காட்டியுள்ளார்கள். அண்மையிலே திருப்பதியில், இசை மூலம் மாடுகள் அதிகம் பாலைச் சுரக்கச் செய்துள்ளனர். சோவியத்து நாட்டினர், பனிப் பாறைக்குள்ளே சிக்குண்டு தவித்த ஏராளமான முதலைகளை நுண் ணிசை மூலம் கவர்ந்து அவற்றைக் கொணர்ந்து காப்பாற்றி யுள்ளனர்.

பாட்டும்; பண்ணும்-பருந்தும்; நிழலும் போல இணைபிரியாத் தொடர்புடையன எனக் கம்பர் கூறுகிறார். ஆகையால், அந்தப் பண்களைப் பற்றிய அறிவு, நமக்குத் தேவைப்படுகின்றது. சிலப் பதிகாரத்துக்கு; அடியார்க்கு நல்லார் எழுதியுள்ள உரையும், பஞ்ச மரபு போன்ற இசைத் தமிழ் நூல்களும் பண்களுக்கான இலக்கணத்தை நன்கு விளக்குவது, நமது பண் ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படுமென கருதுகிறேன். (தொடரும்)

குடி-3 முதலில் படித்தவன் குடித்துவிட்டு மீதியைத்தான் நமக்குத் தருவான்:

குடி-4 அப்படியில்லை! இதில்தாண்டா ஒப்புரவு (Socialism) வளரும். எவ்வளவு அன்பு நம் அரசுக்கு! மக்களில் யாரும் மது இல்லையென்று சொல்லிவிடக்கூடாதாம்! படித்தவனும் படியாதவனும் குடிக்கவேண்டும். எனவே எல்லோருக்கும் பங்கிட்டு வழங்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடு.

குடி-3 முதலிலேயே நம் அண்ணன் சொன்னான்: அறிவாளிகள் யெல்லாரும் சிந்தித்துத்தான் மதுக்கடைகளைத் திறந்தார்கள் என்று; அஃது இப்போதுதான் நன்கு விளங்குகிறது; நம் நாட்டு அறிவாளிகள் அறிவாளிகள்தாம்! ஒப்புரவுக் கொள் கையை அருமையாகப் புகுத்துகிறார்கள். மது இல்லை என்று சொல்லும் வறுமை இருக்கவே கூடாதாம்! நல்ல ஏற்பாடு;

குடியா : குடிகாரக் கூத்தடித்தான்களே! நல்லவர்களால் எண் ணப்படுபவர்களே அறிவுடையார்! அவர்கள் எண்ணியே மதுக்கடைகளைத் திறந்தார்கள் என்று கூறுகிறீர்களே! அச் சான்றோரை அவர் தாயும் காண நாணுவாள் என்பதை மறந்தவர்கள்தாம். உங்கள் கூற்றுப்படி கள்ளுக் கடைகளைத் திறந்த அறிவாளிகள், மக்களை மயக்கும் கள்ளைக் குடிக்க வைத்த அரசை குடிவெறியில் போற்றுகிறீர்கள் இல்லையா? அந்த அரசைக் கண்டு பகைவர் அஞ்சார்; தனக்கு வரும் அழிவை எண்ணாது உங்களையும் கெடுத்துத் தங்களையும் கெடுத்துக்கொண்டார்கள்; அதுமட்டுமா? நீங்கள் வெயிலில் வெயர்வை வடியப் பாடுபட்ட காசுகள் யாவும் வீணாகின்றன.

குடி-3 போம்; ஐயா, போம்; உமக்கு மூளை சரியாக வேலை செய்யவில்லை: கொஞ்சம் கள்ளைக் குடித்துவிட்டு எண்ணிப் பாரும்; நான் குடிக்கக் கொடுக்கும் காசுதான் என் மகன் பள்ளியில் சாப்பிடும் சார உணவிற்குச் செலவாகிறது; எனக்குச் சாறு! என் மகனுக்குச் சோறு; இதுதான் ஒப்புரவு!

குடியா : நூறு மரத்தை வெட்டிச் சாய்த்துவிட்டு ஒரு மரத்தை வளர்ப்பதா ஒப்புரவு? உங்களைத்திருத்த உங்களைக் கெடுத் தவனைத் திருத்தினால்தான் முடியும். (போகிறான்) நான் போகிறேன்.

கண் : (குடிக்க வருகிறான்) என்ன செய்கிறீர்கள்! எல்லோரும்.

குடி-1 குடிக்கிறோம்! குடிக்கிறோம்!

கண் : (கள் விற்பவனிடம் காசைக் கொடுத்துப் பட்டையை நீட்டி) விடு இதிலே அரைப்படி கள்ளை. (குடிக்கிறான்)

கருப் : (கண்ணையன் பக்கம் வந்து நிற்கிறான்.)

கண் : (குடி மயக்கத்தில் தள்ளாடி) யாரது என் முன்னால் நிற்பது?

கருப் : என்ன? கண்ணையா! நான் தெரியவில்லையா?

கண் : தெரியவேண்டியது தெரியவில்லை. தெரியக் கூடாதது தெரிகிறது. நீ யார்?

கருப் : நான்தான் தம்பி... நான்தான்.
கண் : யார்? கருப்பணன் அண்ணனா?
கருப் : ஆம் தம்பி நான் கருப்பணன்தான்.
கண் : வா, வா. நீயும் குடி! (கள்விற்பவனைப் பார்த்து) அண்ணனுக்கு நல்ல கள்ளாய்ப் பார்த்துவிடு, ஒருபடியை!
கருப் : (பட்டையை நீட்டுகிறான்) விடு.
கண் : அண்ணே! குடித்துவிட்டாயா?
கருப் : ஆமாம்! என்ன சுவை! ஆகா என்ன சுவை! (குடித்து விட்டுத்தள்ளாடி) கண்ணையா?
கண் : என்ன?
கருப் : நிலம் இப்போதுதான் விரைவாய்ச் சுற்றுவது போலத் தெரிகிறது.
கண் : எனக்கு மளமள என்றல்லவா சுற்றுகிறது. உனக்கு?
கருப் : எனக்குந்தான். கண்ணையா வா வீட்டிற்குப் போவோம்.
கண் : வேண்டாம்! கருப்பா நான் என் வீட்டிற்குப் போகிறேன்.
கருப் : ஏய், நம்ம வீட்டில் தங்கி இருந்துவிட்டுக் காலையில் போ. அல்லது உன் கால்களை எங்கேயாவது வைத்துவிட்டுத் திண்டாடப்போகிறாய்.
கண் : (தடுமாறி நடந்துகொண்டு) அண்ணே! என் கால்கள் நான் நினைத்தபடி நடக்க மறுக்கிறது. பின்னுகிறது.
கருப் : ஏய், வா, வீட்டிற்குப்போவோம் (இருவரும் ஒருவரையொருவர் பிடித்துக்கொண்டு தள்ளாடித் தள்ளாடிப் போகிறார்கள்.

காட்சி—கரு

உறுப்பினர்கள் : சிங்கன், வள்ளி, கண்ணையன்.
இடம் : எழில்நிறைந்த இடம்.
நிலை : காதல்.

வள்ளி : (மாலையுடன் தோட்டத்தில் சிங்கனைத் தேடி வருகிறாள்)
சிங் : (சிந்தனையில் அண்மையிலிருக்கும் மண்ணைப் பார்த்துக் கொண்டு நிற்கிறான்.)
வள்ளி : (மாலையை அவன்மீது வீசுகிறாள், அம் மாலை அவன் கழுத்தில் விழ.)
சிங் : (திடுக்கிட்டுப் பார்க்கிறான்)
வள்ளி : என்ன சிந்தனையோ?
சிங் : ஆம், கனி இனியாளே, உன் நினைவு வர ஓடிவந்தேன். வள்ளி, (நின்ற இடத்திலிருந்தவாறு) அதோ தெரிகிறதே குன்றம். அதனைக்கண்டேன். அஃது ஓர் கதை கூறிடக் கேட்டு நின்றேன். நீ வந்ததைக்கூடப் பாராமல் நின்றுவிட்டேன்.
வள்ளி : நீங்கள் வந்து மிகு வேளை ஆகியதோ?
சிங் : ஆமாம் வள்ளி. குன்றங்கூறிய கதையைக் கேட்டேன். கழிந்த வேளையே தெரியவில்லை.
வள்ளி : அப்படி என்ன கதை கூறியது, அத்தான் அம்மலை.
சிங் : பாதிக்கதை கூறி, முழுவதையும் முடிக்கும்முன் நீ வந்துவிட்டாய்.

வள்ளி : அந்தப் பாதிக் கதையைக் கூறுங்கள் அத்தான், மீதிக் கதையை பின்பு கேட்போம்.

சிங் : ஆம், சொல்லுகிறேன்கேள், வள்ளி! வானைத் தொட்டு, நிற்கும் தேக்குமரமும், அதனோடு போட்டிபோடும் வேங்கம், பொன்நிறச் சந்தன மரமும் சோலையாக நிற்பதைக் கண்டேன்.

வள்ளி : அதனால் என்ன அத்தான்!

சிங் : அவற்றை வெளிநாட்டார் விரும்பி வாங்குவதால் நம் நாடு பொன்னைக் குவிக்கிறது வள்ளி; அதுமட்டுமன்று, மான் ஓடும் இம் மலையில் யானைதரும் மருப்பு விளைகிறது; இன்னுமிகேள், முல்லையும், மல்லிகையும் முளரிமலரும் உன் முகம் எழில் வரை அவை வளர்ந்தன. (மலரை எடுத்து அணிவித்து) வள்ளி நீ இம் மலரை அணிந்துகொள்வதால் உன் அழகை அழகுபடுத்துகிறது இல்லையா?

வள்ளி : ஆம். அத்தான் இம்மலர்களை விற்றுத்தானே பிழைக்கின்றேன்.

சிங் : வள்ளி மலைபடு பொருள்களை மட்டுமா தமிழ்நாடு தருகிறது. மருதத்தில் விளையும் நெல்லும், கன்னல் தரும் முத்தும், கண்டவரை இழுக்கும் வாழைகளின் குலைகள், அதோபார்! பலாவும், மாவும், குரங்குகள் தாவி ஆட நாவல் மரமும், எவ்வளவு மிகுதியாக நிற்கின்றன!

வள்ளி : ஆம் அத்தான். அக் குலைகளில் ஒட்டிய கனிகளைத் தின்னக் கிளிகள் சுற்றுவது, நீங்கள் என்னைச் சுற்றுவது போலவேதான். இந்த முல்லையாற்றில் நல்ல தண்ணீர் பாய்வதுபோல, அத்தான்... (அவன்முன் குனிந்து நிற்கிறாள்)

சிங் : உன்மேல் என் அன்பு பாயும், கேள், பொருநை யாற்றில் பொங்கி வரும் நீரும், வையைக் கரையின் வளம் மிகுந்த பொருள்களும், காவிரியில் கரிகால் பெருவளத்தான் கட்டிய கல்லணையால் கணக்கற்ற களஞ்சிய நெல்லும் இந்த நாட்டை வளமாக்குகிறது வள்ளி.

வள்ளி : ஆம் அத்தான் ஆம்.

சிங் : புன்செயில் விளையும் பொன்நிறத் தினையும், வகை வகையானவாகும், நரைமுடி போன்ற வெள்ளைநிறத் தும்பித் தலை மின்னல் எனக் காட்டும் சோளமும், காடையின் கண்ணை நினைவுறுத்தும் காடைக்கண்ணியும், சாமையும் எள்ளும், கொள்ளும், இன்னும் எண்ணற்ற கிழங்கின் வகைகளும், இந்த மண்ணில்தாம் மண்டிக் கிடக்கின்றன, வள்ளி.

வள்ளி : ஆமாம் அத்தான் இப்போது வீசும் இந்தத் தென்றல் காற்று மணக்கிறது.

சிங் : அஃது ஏன்? தெரியுமா? அதோ அந்தக் குன்றில் குலுங்கும் ஏலத்தின் மணமும், மிளகின் குணமும், சந்தனத்தின் நாற்றமும், கமுகின் வீச்சும் காற்றில் கலந்து வருகின்றன.

வள்ளி : அத்தான் ஒன்றுகேட்கிறேன், இவ்வளவு செழித்த நாட்டில் ஏனத்தான் வறுமை வந்தது? [தொடரும்]

பல்கலைக் கழகத்தில் தமிழ் அகரமுதலித் தொகுப்பாசிரியராக நமது சொல்லாய்வறிஞர் அவர்களை அமர்த்தம் செய்த பின்னர் காய்ந்தும், எரிந்தும், வெந்தும், நொந்தும், கிடக்கின்றனர்.

தமிழைச் சொல்லிப் பிழைக்கும் அத்தகையவர்கள் தமிழுக்குத் தாமும் நல்லாக்கம் செய்யமாட்டாமலும், நம்மனோர் நல்லாக்கம் செய்ய முயலுவதைப் பொறுக்கமாட்டாமலும், ஆற்றாமலும் உள்ள நிலையினை என்னென்பது! அவர்கள் ஒருபுறம் இருக்கட்டும். "இருளி" வரும் இந்நேரம் "அருளி"யினால் "மருளி" ஓடட்டும் கங்குல்! "ஒளிறி" எழட்டும் எழுச்சித் தமிழ் ஞாயிறு! என்றும் உங்கள் அன்புள்ள,

— மூடவை ந. தமிழ்வேந்தன், ஒட்டன்சத்திரம்.

0 : 1144 : பேரன்புக்குரிய பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஐயா அவர்களுக்கு வணக்கம்! நான் சுவடி-22, ஓலை-2 சிலைத் திங்கள் 'தென்மொழி'த் தாளிகையைக் கண்ணுற்றேன். அதன் கண் அரிமழம் சி. தமிழரசன் அவர்களின் சிறப்பு மடலுக்கு விளக்கம் கூறிய அன்பர்கள் எழுதிய கருத்து விளக்க மடல்கள் பகுதியில் இரா. நக்கீரன் (வேலூர்-6) அவர்கள் எழுதிய மடலில், "நான் 25 ஆண்டுகளாகத் 'தென்மொழி' படித்து வருகிறேன் என்று நவின்றுள்ளார். அன்னாரின் கூற்றுப்படி நோக்கின் நமக்கு வியப்பாக இருக்கிறது.

ஏனெனில், 'தென்மொழி' திங்கள் இதழ் வெளி வருவது 22 ஆவது சுவடி. அன்னார் கூற்று தவறு? அல்லது தங்களது அச்சு வெளியீட்டில் ஏற்பட்ட தவறு? அல்லது இதற்கு முன் இதழ் வெளிவந்து நின்று விட்டதா? விளக்கம் வேண்டும். நன்றி.

—உ. மோட்சமேரி, கரந்தை.

(ஆசிரியவுரை முகப்பில் நிறுவனம் தி. பி. 1990 (1959) என்பதைக் கவனிக்கவும். 'தென்மொழி' இடையில் நின்று, பின் வெளிவந்ததும், இடையிடை இரண்டு மூன்று மாதங்கள் இணைந்து வெளிவந்ததும், சுவடி எண்ணிக்கை வேறுபாட்டிற்குக் காரணம். ஆ-ர்.)

0 : 1145 : பெருந்தகையீர், வணக்கம். 'தென்மொழி' இதழின் திச. 85, சன. 86 ஆசிரிய உரையில் தமிழகத் தலைவர்கள் எனும் தகைமையைப் பெரியாருக்கும்-காமராசருக்குமே வழங்கியுள்ளீர்கள்.

'அண்ணா பத்து' பாடிய தாங்கள், அறிஞர் அண்ணாவை இப்பட்டியலில் சுட்டிக் காண்பிக்க விரும்பாமல் நின்றது யாது காரணம் கருதி என்பது புலப்படவில்லை.

இனித் தமிழ், தனித் தமிழ்நாடு என்று ஒருபுறம் இயக்கம் காண்பீர்கள். இவற்றுக்குச் சிறிதும் தம்மை ஆட்படுத்திக்கொள்ளாத ஒருவரைத் தலைமேல் வைத்து நிலை தவறுவீர்கள்.

தமிழகத்தில் தமிழ் உணர்வை வளர்த்துவிட்ட ஒரு பெரும் தானைத் தலைவரை அறிஞர் பெருந் தகையைத் தமிழகம் கண்டிரா விட்டால், தங்களுடைய 'தென்மொழி'யே உருவாகியிராது என்பதையும், தெரியாமல் உருவாக்கப்பட்ட நிலையெனில், தென்மொழியைப் படித்துணர யாரும் முன்வந்திருக்கமாட்டார்கள் என்பதையும் பணிவன்புடன் தங்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். தென்மொழியன்பன்,

—க. சி. அகமுடை நம்பி, திருச்சி-20.

0 : 1146 : மானமிகு ஆசிரியர் பாவலரேறு அய்யா அவர்களுக்கு, வணக்கங்கள். 'தென்மொழி' யும்', 'தமிழ்ச்சிட்டு'ம் புதுவை மாநகரில் புதுமை படைத்து வருகின்றன. தென்மொழி

(தொடர்ச்சி அட்டை 4-ஆம் பக்கம்)

பின் தேன் சுவை வாசகர்களை வலைபோட்டு இழுக்கிறது; தமிழ்ச்சிட்டு சிறார்களைப் பறந்து பறந்து பிடிக்கிறது. எனினும் எனக்குத் தொடக்கம் முதலே 'தென்மொழி' மீது இருந்துவரும் வருத்தங்கள் இரண்டுதாம்: ஒன்று, தென்மொழியில் கட்டாயம் தங்களின வினா-விடைப் பகுதி இடம் பெற்றே ஆகவேண்டும்; ஏனெனில், தங்களைப் பற்றியும், தென்மொழி பற்றியும் விளங்காமலும், விளங்கிக் கொள்ளாமலும் இருந்துவரும் பலருக்கும் இது ஒரு பயனுள்ள வாய்ப்பாக இருக்கும் என்று நம்புகிறேன். இதன் மூலம் பல ஐயங்கள் தீர்த்து வைக்கப்படும், வீண் புரளிகள்' பொய்யுரைகள் ஒழிந்துபடும். இரண்டாவது, தென்மொழி தந்தை பெரியாரின் சீர்திருத்த எழுத்துகளில் வரவேண்டும். அது தாம் பெரியாருக்குச் செய்த தொண்டாக ஒருபுறம் இருப்பினும், தமிழை எளிமையாக்குவதும் கூட; எனவே, இந்த என்னுடைய இரண்டு வேண்டுகோள்களையும் நிறைவேற்றுவீர்கள் என்று நம்புகிறேன்...தென்மொழி வளரவும், தமிழ்ச்சிட்டு நீண்ட தூரம் பயணம் செல்லவும் எனது பணி என்றும் தொடரும் என்று உறுதி கூறுகிறேன். —சி. குமரன், க.இ., மச்சவாடி, புதுகை.

0 : 1147 : பெருமதிப்பிற்குரிய பாவலரேறு அவர்களுக்கு, வணக்கம்; கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தங்களின் 'தென்மொழி', 'தமிழ்ச்சிட்டு' என்ற தூய தமிழ் இதழ்களைப் படித்துப் பயனடைந்து வருகிறேன். 10-2-1986 அன்று சென்னைத் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் தாங்கள் தோன்றி, 'வழிபடும் தமிழ்' என்று தெள்ளு தமிழ் நிகழ்ச்சியை அளித்ததைக் கண்டு மிக்க மகிழ்ச்சியுற்றேன். பல இன்னல்களுக்கும் இடையே தங்களைப் போன்ற தமிழ்ச் சான்றோர், கொள்கைப் பிடிப்புடன் நடைபோடுவதைக் கண்டு பெருமிதம் அடைகிறேன். தமிழின வீழ்ச்சி, தமிழரின் இழி நிலை போன்ற கேடுகள் களையப்பட தங்களின் 'தென்மொழி' போலும் தூய தமிழ் இதழ்கள் பல மேலும் மேலும் வெளிவர வேண்டும். இன்றைய அறிவியல், மருத்துவம், தொழில் நுட்பம் போன்ற துறைகள் குறித்த செய்திகள், மொழி ஆய்வு குறித்த செய்திகள், இனிமையான தமிழ்ப் பாக்கள் போன்றவை மட்டுமே 'தென்மொழி'யிலும், 'தமிழ்ச்சிட்டி'லும் இடம் பெறவேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

தங்களைப் போன்ற தமிழ்ச் சான்றோர், நீண்ட நெடுநாள் வாழ அருளவேண்டும் என்று இறைவனை வேண்டிக்கொண்டு இம் மடலை முடிக்கிறேன். -திருவாட்டி, கீதா-உதயகுமார், சென்னை-34.

பி. கு. : தங்களின் செந்தமிழ் (தொலைக்காட்சி)ப் பேச்சில் 'பக்தர்கள்', சச்சரவு' என்ற சொற்கள் இடம் பெற்றதைக்கண்டு வியப்புற்றேன். இவை தூய தமிழ்ச் சொற்கள்தாமா என்ற மயக்கம் எனக்கு ஏற்பட்டுள்ளது; இதனைத் தெளிவுற விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(ஆசிரியர் குறிப்பு : பற்று-பற்றிமை - பற்றன்- பத்தி-பத்தன-பத்தினி இவ் வடிவங்கள் தூய தமிழடிப்படைச் சொற்கள்; பத்தி, பத்தன் என்னும் சொற்களையே வடமொழியில் பக்தி, பக்தன் என்று திரித்துக் கொண்டார்கள். தொலைக்காட்சிப் பேச்சில் பத்தன் என்று கூறினால் திருமனச் சரியாக விளங்கிக்கொள்ள மாட்டார்கள் என்பதற்காகவே, சிறு ஒலியழுத்தம் தந்து பக்தன் என்று கூறவேண்டியதாயிற்று. 'சச்சரவு' தமிழ்ச் சொல்லே.)



நமக்கு வந்த மடல்கள்.

0 : 1148 : பெருமதிப்பிற்குரிய பெருஞ்சித்திரனாருக்கு எல்லா நலமும் பெருகுக! உங்கள் செந்தமிழ்த் தொண்டு சிறக்க விழைக்கின்றனம். உங்களால் நடத்தப்படும் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் மூன்றும் தமிழ், தமிழரின் நலம் காக்கும் இதழ்களாகத் திகழ்கின்றன! மூதலிரண்டு இதழ்களைத் தொடர்ந்து வாங்கி வருகிறேன். செந்தமிழை வளர்க்கும் உங்கள் தொண்டைப் போற்றும் நிலையில் இருக்கும் நாம், ஒரு சிறு வேண்டுகோளையும் உங்களிடம் வைக்கிறோம் பள்ளிப் பாட நூல்கள், கல்லூரிப் பாடநூல்கள் மற்றுமுள்ள அரசு ஆணை, அறிவிப்புகள் சீர்திருத்த எழுத்தில் வெளி வருகின்றன. செந்தமிழ் உணர்வுடைய இதழாசிரியர் சிலர் பின்பற்றுகின்றனர். தமிழ் வளர்க்கும் நீங்கள், சீர்திருத்த எழுத்தில் உங்கள் இதழ்களை வெளியிடாமை எமக்கு மனக்குறையாக இருக்கிறது. வழிகாட்டி வரும் நீங்கள் சீர்திருத்த எழுத்தில் இதழ்களை வெளியிட்டு ஊக்குவிக்கக் கேட்டுக்கொள்கிறோம்.

அன்பன், செந்தமிழ்ச் செம்மலார்,
பேரா. கா. நமசிவாயர், சென்னை-39.

0 : 1149 : பேரன்புடைய அய்யா, வணக்கம். தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களின் கருத்துகளைப் படித்தேன். விளக்கம் அறிந்தேன். இவை தமிழகத்தில் பிறந்த தமிழன் ஒவ்வொருவனும் பெட்டகமாக வைத்துப் பாதுகாக்க வேண்டிய இதழ்கள் ஆகும். அறிவு தரும் நூல்கள் அவை. இன்றைய சூழ்நிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. தென்மொழியில் வரும் "கொய்யாக்கனி" நாடகம். இதழ்களை தவறாது படிக்கிறேன். மற்றவரையும் படிக்கச் செய்கிறேன். நன்றி.

- கோவை கோபால், வையப்பட்டி.

0 : 1150 : பெருமதிப்பிற்குரிய அய்யாவுக்கு, வணக்கம். தொலைக்காட்சி நிகழ்ச்சியில் உங்களது 'வழிபடு தமிழ்' கண்டு, கேட்டு மகிழ்ந்தோம். கருத்தாழம் கொண்ட தங்கள் உரையில், தமிழின் முதன்மையினையும், தனித் தன்மையினையும் வலியுறுத்தும் கருத்துகள் இருந்தன. இதுபோலும் துணிவுடன் உரை நிகழ்த்த யாரால்தான் முடியும்? நீவீர் பல்லாண்டு வாழ்ந்து, இத் தமிழ்க் குமுகாயம் முன்னேற வழிவகுக்க வாழ்த்துகிறேன்.

- மருத்துவர் அ. விசுவநாதன், சென்னை-3.

0 : 1151 : பெருமதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு, வணக்கம். அண்மையில் நாங்கள் ஆலந்துறையில் நடைபெற்ற திரு. வி. க. விழாவிற்காகச் சென்றிருந்தோம். அங்கு எங்களை வரவேற்று விருந்து பேணிய அன்பர் ஒருவர், தாம் தமிழர் தலைவர்களிடத்தும், தமிழறிஞர்களிடத்தும் கண்ட உண்மை நிலைகளைப்பற்றிக் கூறினார்.

அப்போது "தமிழ் மாமுனிவர் எனத் தம்மைச் சொல்லிக் கொள்ளும் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் தம் மணி விழாவில்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்கவும்)